
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2023 செப்டம்பர் 17 - செப்டம்பர் 23 | விலை: ரூ.15 | 20 பக்கங்கள் | இதழ் 24




# பாஜகவே ஆட்சியை விட்டு வெளியேறு!

**செப். 12,13,14ல்**
**தமிழ்நாடு முழுவதும்**
**லட்சம் பேர் பங்கேற்பு**

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போர்க்கோலம்






வட சென்னை

**மோடி அரசே வெளியேறு என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செப்டம்பர் 12 முதல் மூன்று நாட்கள் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் போராட்டம் நடத்தியது. இதில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் எழுச்சியுடன் பங்கேற்றனர்..**

கடந்த 10 ஆண்டுகளாக ஒன்றிய ஆட்சியில் உள்ள மோடி தலைமையிலான அரசு மக்கள் விரோத கொள்கைகளை தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. இதனால் பெரும் பகுதி மக்கள் வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. திட்டக் குழு கலைப்பு, காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு நிலை ரத்து, 'நீட்' தேர்வு மூலம் மருத்துவக் கல்வி மறுப்பு, மாநிலங்களின் அதிகாரங்களைப் பறித்து ஒன்றியத்தில் குவித்தல், ஒரே நாடு, ஒரே தேர்தல், பொது சிவில் சட்டம் என கூட்டாட்சி கோட்பாடுகளை தகர்த்து வருகின்றது. பெரும் பன்னாட்டு குழும நிறுவனங்களின் லாப வேட்டைக்கு பொதுத்துறை நிறுவனங்களையும், இயற்கை வளங்களையும் பலியிட்டு வருகிறது. கருத்து தெரிவிக்கும் உரிமைகளை மறுத்து, எதேச்சதிகார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

வரலாறு காணாத வேலையின்மை, விண்ணை முட்டும் விலைவாசி, வேலை நீக்கம், விவசாய விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை மறுப்பு, விளைநிலங்களை பறித்து குழுமப் பண்ணைகள் அமைக்கும் முயற்சி என நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் குந்தகம் ஏற்படுத்தும் செயலில் ஒன்றிய மோடி அரசு ஈடுபட்டு வருகிறது. தமிழ்நாடு உட்பட எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர் மாளிகை வழியாகப் போட்டி அரசு நடத்தி வருவதை

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

கிருஷ்ணகிரி
தேன்கனிக்கோட்டை






தர்மபுரி


தென் சென்னை



மத்திய சென்னை


சிவகங்கை


விருதுநகர்

1 ஆம் பக்க தொடர்ச்சி

இனியும் அனுமதிக்க இயலாது என்ற மக்களின் உணர்வை வெளிப்படுத்தும் வகையில் "மோடி அரசே வெளியேறு" என்ற முழக்கத்தை முன்வைத்து தமிழ்நாடு முழுவதும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செப்டம்பர் 12, 13, 14 தேதிகளில் தொடர் மறியல் போராட்டங்களில் ஈடுபட்டது. நூற்றுக்கணக்கான மையங்களில் நடைபெற்ற மறியல் போராட்டங்களில் திரள் திரளாக பல ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் எழுச்சியுடன் பங்கேற்றனர்.

## வடசென்னை

தலைநகர் சென்னையில் வடசென்னை, கடற்கரை ரயில் நிலையம் எதிரே உள்ள தபால் நிலையம் முன்பு கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாவட்டச் செயலாளர் வெங்கடேஷ் வேம்புலி, மாநிலக்குழு உறுப்பினர் ஏழுமலை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## முத்தரசன் முழக்கம்

மறியல் போராட்டத்தின் போது செய்தியாளர்களிடம் பேசிய மாநில செயலாளர் இரா.முத்தரசன், "மோடி அரசு இனியும் தொடர்ந்தால் நாட்டில் ஜனநாயகம் சீரழிக்கப்படும். இந்தியா என்ற மகத்தான கூட்டணி உருவான பிறகு மோடி, அமித்ஷா போன்றவர்கள் கதிகலங்கி உள்ளனர். இந்தியா என்கிற இந்த பெயரை எந்த அமைப்பிலும் விவாதிக்காமல் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் கருத்துக்களையும் கேட்காமல் தன்னிச்சையாக பாரத் என்று எந்த அதிகாரத்தில் மோடி அறிவித்திருக்கிறார். அது மட்டுமல்லாமல் ஜி 20 மாநாடு விருந்து நிகழ்ச்சிக்கு நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸின் அகில இந்திய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அழைக்கப்படவில்லை. இது அப்பட்டமான ஜனநாயக விரோத செயல். ஜனநாயகம் மதச்சார்பின்மை கொள்கை மீது நம்பிக்கை உள்ள அனைத்து கட்சிகளும் இந்தியா கூட்டணியில் இணையும். நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும் மோடி வீட்டுக்கு அனுப்பப் படுவார்" என்று அவர் கூறினார்.

சமையல் கேஸ் சிலிண்டருக்கு பாடைகட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். 7.5 லட்சம் கோடி ரூபாய் முறைகேட்டைக் குறிக்கும் வகையில் சிறுவர்கள் விளையாடப் பயன்படுத்தும் 2000 ரூபாய் மாதிரி நோட்டுகளால் ஆன கூண்டு ஒன்றை சுமந்தபடி ஒருவர் மோடியின் முகமூடியுடன் கலந்துகொண்டார். ராக்கெட் வேகத்தில் விலைவாசி உயர்வதைக் குறிக்கும் வகையில் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு என்று எழுதப்பட்ட மாதிரி ராக்கெட் ஒன்றையும் கொண்டு வந்திருந்தனர். ஏழைகளை வஞ்சிக்கும் வகையில் ஒன்றிய அரசு செயல்படுவதை சித்தரிக்கும் வகையில் மோடியின் முகமூடி அணிந்தபடி பாமரன் ஒருவரை காலால் மிதிப்பது போன்று நடித்துக் காட்டினர். குரங்கு வேடம் அணிந்த ஒருவர் செங்கோலுடன் போராட்டத்தில் கலந்து கொண்டார். ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக முழக்கமிட்டபடி ராஜாஜி சாலையின் குறுக்கே அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

## கோவை

கோவையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகிலிருந்து ஊர்வலமாகச் சென்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர், தந்தி அலுவலகம் முன்பு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த மறியல் போராட்டத்தில் பங்கேற்ற 500க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## செங்கல்பட்டு

செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்தில் இருந்து ஊர்வலமாகச் சென்று இந்தியன் வங்கி முன்பு மறியலில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்


சேலம்


கிருஷ்ணகிரி ஒசூர்


மதுரை


கோவில்பட்டி


பெண்ணாடம்



ஒட்டன்சத்திரம்


திண்டுக்கல்


ஆரல்வாய்மொழி


மயிலாடுதுறை


பெரம்பலூர்


நத்தம்

2 ஆம் பக்க தொடர்ச்சி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.ராஜ்குமார் தலைமை வகித்த இந்தப் போராட்டத்தை, மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் டாக்டர் ஜி. ஆர். ரவீந்திரநாத் தொடங்கி வைத்தார். மாநிலக்குழு உறுப்பினர் டாக்டர் ஆர்.சாந்தி உட்பட மறியலில் பங்கேற்ற தோழர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

### கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் பாரத ஸ்டேட் வங்கி முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு கட்சியின் மாவட்ட செயலாளர் கே.இராமசாமி தலைமை தாங்கினார். இந்தப் போராட்டத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு கைதாகினார்.

### கடலூர்

கடலூர் ஜவான் பவன் அருகில் இருந்து பேரணியாக புறப்பட்டு, ஸ்டேட் பாங்க் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது. தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் டி.எம். மூர்த்தி தலைமையில், மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் டி. மணிவாசகம், மாவட்டச் செயலாளர் பி துரை, மாவட்ட துணைச் செயலாளர்கள் வி.குளோப், வி.எம். சேகர் மாவட்டப் பொருளாளர் எம்.கே.பாஸ்கர் உட்பட ஏராளமானோர் கைதாகினர். மேலும் இதே நாளில் ஸ்ரீமுஷ்ணம், பென்னாடம் ஆகிய மையங்களில் மறியல் நடைபெற்றது.

### தஞ்சாவூர்

தஞ்சாவூரில் தலைமை அஞ்சலகம் முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நடைபெற்ற பேரணி மறியலில் ஏறத்தாழ 1000 பேர் பங்கேற்றனர்.

### மயிலாடுதுறை

மயிலாடுதுறை தலைமை தபால் அலுவலகம் முன்பு மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன் தலைமையில் மறியலில் ஈடுபட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

### மதுரை

மதுரை ஜங்ஷன் ரயில் நிலையம் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் சீ.தினேஷ், மாவட்டச் செயலாளர்கள் எம்.எஸ்.முருகன், முத்துவேல், மாநிலக் குழு உறுப்பினர்கள் பா.ராஜலெட்சுமி, நாகஜோதி, கட்சி கட்டுபாட்டுக்குழு உறுப்பினர் ப.காளிதாஸ் உட்பட மறியலில் ஈடுபட்ட தோழர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

### தென்காசி

தென்காசியில் மாவட்டச் செயலாளர் டி. இசக்கித்துரை தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஏ ஐ டி யு சி பொதுச் செயலாளர் டி. சுப்பையா, மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்.வேலாயுதம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் ஏ.பரமசிவம் ,எம்.எஸ். கிட்டப்பா, எஸ். மாரியப்பன், கே . பழனிச்சாமி. ஆண்கள் 74 பெண்கள் 36 மொத்தம் 110 பேர் கலந்து கொண்டனர்.

### வேலூர்

வேலூரில்இந்தியகம்யூனிஸ்டுகட்சியின் சார்பில் 12.09.23.செவ்வாய் காலையில் தலைமை தபால் நிலையம் அருகில் மாவட்ட செயலாளர் ஜி.லதா. தலைமையில் மறியல் நடந்தது. துரை செல்வம், எல்.மணி, எஸ்.காவேரி, எம்.ஜீவா, டி.ஆனந்தன், டி.அருள்குமார் முன்னிலை வகித்தனர். மறியலில் 18.ஆண்கள் 98.பெண்கள் உட்பட்ட 116.கலந்து கொண்டனர்.

### சேலம்

சேலம் மாவட்ட மையத்தின் சார்பில் மறியல் போராட்டம் கோட்டை அருகில் உள்ள ஸ்டேட் பாங்க் முன்பு மாவட்ட செயலாளர் தோழர் ஏ.மோகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர்கள் எம்.ராமன், ஏ.கந்தன், மாவட்ட பொருளாளர் டி.கண்ணன் மற்றும் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள், மாவட்ட குழு உறுப்பினர்கள், கட்சி தோழர்கள் 242 பேர் கலந்து கொண்டனர்.

### தென் சென்னை

தென்சென்னை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக ஆளுநர் மாளிகை அருகே மறியல் போராட்டம் நடைபெற்றது. மாநில துணைச் செயலாளர் நான் பெரியசாமி, மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா, மாநிலக்குழு உறுப்பினர் ஏழுமலை உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். பிரதமர் மோடி மற்றும் ஆளுநர் ரவி இருவராலும் மக்கள் பாதிக்கப்படுவதையும் விலைவாசி உயர்வையும் வெளிப்படுத்தும் வகையில் நடித்துக் காட்டினார்.

### மத்திய சென்னை

மத்திய சென்னை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக சென்னை குறளகம் அருகே மறியல் போராட்டம் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி உட்பட மறியலில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

### கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் தளி சட்மன்ற தொகுதி உறுப்பினர் தி. ராமச்சந்திரன் தலைமையில் நடந்த மறியல் போராட்டத்தின் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரி

குமரி மாவட்டம் கட்சியின் சார்பில் மாநிலம் தழுவிய தொடர் மறியல் போராட்டம் அண்ணா பேருந்து நிலையம்

தொடர்ச்சி 20 ஆம் பக்கம்


வேலூர் - கணியம்பாடி


திருத்துறைப்பூண்டி


அலங்காநல்லூர்


சங்கரன் கோவில்


கோத்தகிரி


பெரியநாயக்கன் பாளையம்


புதுக்கோட்டை
அன்னவாசல்

கட்சிக் கடிதம்

# தோழர்களுக்கு பாராட்டுக்கள்.. வாழ்த்துக்கள்!



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**உங்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள். போர்க்களம் கண்ட உங்களை பாராட்டவும், வாழ்த்தவும் கடமைப்பட்டுள்ளோம்.**

செப்டம்பர் திங்கள் 12, 13 மற்றும் 14 ஆகிய மூன்று தினங்கள் தமிழ்நாடு முழுவதும் மாபெரும் மறியல் போராட்டத்தில், பல்லாயிரமாய் பங்கேற்று செங்கொடியை உயர்த்திப் பிடித்து, விண்ணதிர முழக்கமிட்டு, கம்பீரமாய் அணிவகுத்து மறியல் போரில் பங்கேற்று கைதாகிய உங்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

ஜி 20 மாநாடு எனக் கூறி, 4000 கோடி செலவு செய்து. உலக தலைவர்களை காட்டி, உள்ளூர் மக்களை ஏமாற்றிய மோடியின் முகமூடியை அம்பலப்படுத்திய உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

ஜி 20 மாநாடு என்ற பெயரால் டெல்லி பட்டினத்தில் வாழ்ந்த அப்பாவி ஏழை, எளிய மக்களை புறந்தள்ளி. அவர்கள் வாழ்ந்த குடிசைகளை எல்லாம் அப்புறப்படுத்தி, அராஜகம் புரிந்த மோடியை, தோலுரித்த தோழர்களே வாழ்த்துக்கள்.

உலகத் தலைவர்களை எல்லாம் ஒரு சேர அணிவகுக்க செய்து, அவர்கள் அனைவருக்கும் சால்வை அணிவித்து, செம்மறி ஆடுகளை கூட்டி செல்வது போன்று அழைத்துச் சென்று, அலங்கரிக்கப்பட்ட தேசப்பிதா காந்தியடிகள் சமாதி முன் வரிசையாக நிற்க செய்து, அதனை புகைப்படம் எடுத்து ஊடகங்களில் வெளியிட்டு புளகாங்கிதம் அடைந்துள்ள மோடி அவர்களே!

திரைப்படங்களில் தனக்கு எதிரான கருத்து உடையவரை படுகொலை செய்து பிணமாக்கி, பிணத்தின் முன்னாள் பலி கொடுத்தவர்கள் கதறி அழ, படுகொலை செய்த நயவஞ்சகர்கள் ஆளுயர மாலையுடன் அடியாட்களுடன் சென்று நீலி கண்ணீர் வடிப்பதை திரைப்படத்தில் தான் பார்த்திருந்தோம். இன்று நிஜமாகவே உங்கள் மூலம் பார்க்க முடிகின்றது.

வேலையின்மை பிரச்சனை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. இளைஞர்கள் நம்பிக்கை இழந்து நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர். அதை நினைத்து சிறிதும் கவலைப்படாதவர் மோடி,

2014இல் தான் கொடுத்திட்ட ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை என்பது குறித்து வாயே திறக்காத மோடியே!

வெளிநாட்டில் நமது நாட்டு கருப்பு பணம் பெரும் குவியலாய் குவிந்து கிடக்கின்றது. நமது நாட்டைச் சேர்ந்த பெரும் முதலாளிகள் நாட்டையும், நாட்டு மக்களையும் ஏமாற்றி பதுக்கி வைத்துள்ளனர்.

அவைகளை மீட்பேன், இந்திய குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 15 லட்சம் வங்கிக் கணக்கில் வரவு வைப்பேன் என்று வாக்குறுதி கொடுத்த மோடியே!

410 ரூபாய்க்கு விற்ற சமையல் எரிவாயு விலையை 1200 என உயர்த்தி கொள்ளையடித்த மோடியே!

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன். வேளாண் விஞ்ஞானி எம். எஸ். சாமிநாதன் பரிந்துரையை ஏற்பேன் என பல்லவி பாடிய மோடியே!

நாட்டின் மிக உயர்ந்த கொள்கையான மதச் சார்பின்மை கொள்கையை, ஆழக் குழி தோண்டி புதைத்து சமாதி கட்டி விட்டு. மக்கள் ஒற்றுமை குறித்து குரல் எழுப்பும் குள்ளநரி மோடியே!

அரசியலமைப்பு சட்டத்தை துச்சமாக மதித்து, சட்டத்தின் ஆட்சியை மாற்றி, சர்வாதிகார ஆட்சி புரியும் மோடியே!

ஒரே நாடு, ஒரே தேர்தல் எனக்கூறி திருவிழா கூட்டத்து திருடன் போன்று திசை திருப்பும் மோடியே!

இந்தியா என்ற கூட்டணியைக் கண்டு குடல் நடுங்கி, அன்றாடம் அலறி அஞ்சி நடுங்கும் மோடியே!

பாரதம் என்று பெயரை மாற்ற எந்த அமைப்பு கூடி முடிவு செய்தது?

ஆர். எஸ். எஸ். விரும்புமானால், அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றிட உங்களுக்கு யார் அதிகாரம் அளித்தது மோடியே!

ஜனநாயக நாட்டில் உரிய விவாதம் இன்றி, விவாதத்தின் மூலம் தீர்வு இன்றி, ஏதோச்சதிகாரமாக முடிவெடுக்க நீங்கள் மன்னரா மோடியே?

மன்னர்கள் ஆட்சியாய் இருந்தால் கூட, அமைச்சர்கள் கூட்டத்தை நடத்தி அதில் தான் முடிவு எடுத்தார்கள்.

ஆனால் எந்த அமைப்பிலும் விவாதிக்காமல், 140 கோடி மக்களை கொண்ட நாட்டின் பெயரை மாற்றிட நீர் யார் மோடி?

அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் அனைத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் உரிய மதிப்பளிக்காமல். இந்தியை திணித்து, செம்மொழியாம் தமிழை இழிவுப்படுத்திட மோடியே நீர் யார்?

நாட்டில் மதக்கலவரங்களை திட்டமிட்டு உருவாக்கி, சொந்த அரசியல் ஆதாயம் தேடிடும் அற்ப புத்தி படைத்திட்ட மோடியே, அமைதி குறித்து பேசுவதற்கு உமக்கு என்ன யோக்கிதை இருக்கின்றது?

மணிப்பூர் பற்றி எரிகின்றது. நித்தம் நித்தம் மக்கள் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள். ஐந்து மாத காலமாக எரிந்து கொண்டிருக்கின்ற கொடிய தீயை அணைத்திட அருகதை அற்ற மோடியே, நாட்டை ஆள்வதற்கு என்ன தகுதி இருக்கின்றது?

மாநில அதிகாரங்கள் அனைத்தையும் பறித்து, அதிகாரக் குவியலை ஏற்படுத்தி, சர்வாதிகாரம் புரியும் உமக்கு, ஜனநாயகம் குறித்து பேசுவதற்கு தகுதி எது?

ஒவ்வொரு நாளும் 20 கோடி மக்கள் இரவு சோற்றுக்கு வழியின்றி பட்டினியாய் படுத்து உறங்க, உலகத் தலைவர்களுக்கு தங்கத்தட்டில் விருந்தோம்பலா?

ஏழரை லட்சம் கோடி ஊழல் புரிந்து விட்டு, ஊழல் இல்லாத நாட்டை உருவாக்குவேன் என்று நாக்கில் நரம்பின்றி பேச வெட்கமாக இல்லையா?

இவ்வாறாக ஆயிரம், ஆயிரம் கேள்விகளை தொடுத்து நடந்திட்ட போர் தான் நமது மறியல் போர்.





இம்மகத்தான போரை வெற்றிகரமாக நடத்திட கடும் முயற்சி மேற்கொண்ட மாவட்ட குழுக்கள், இடைநிலை குழுக்கள், கிளைகள் அனைத்திற்கும் பாராட்டுக்கள்.

மகத்தான போரில் பங்கேற்ற கட்சி உறுப்பினர்கள், வர்க்க, வெகுஜன அமைப்புகளின் தோழர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

அடுத்த போருக்கு ஆயத்தமாவீர்! மீண்டும் சந்திப்போம்!.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## வினாடி - வினா

1 ஆதிசங்கரர் எந்த நூற்றாண்டில் எங்கு பிறந்தார்?

2 ஆதிசங்கரர் தத்துவத்தின் பெயர் என்ன?


3 காரல் மார்க்ஸ் யாருடைய தத்துவத்தை தலைகீழாகப் புரட்டியதாக கூறுகிறார்?

4 பாபாசாகேப் அம்பேத்கர் இந்து மதத்தில் இருந்து பௌத்த மதத்திற்கு எந்த ஆண்டு மாறினார்?

5 உயர்நீதிமன்றம் அமைந்துள்ள ஒன்றிய ஆட்சிப் பிரதேசம் (union territory) எது?

6 இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை என போற்றப்படுபவர் யார்?

விடைகள் 14 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 24

## துணைவேந்தர் தேர்வுக் குழு: ஆளுநரின் அடுத்த அடாவடி!

தமிழ்நாட்டில் உயர் கல்விக்காக 13 பல்கலைக்கழகங்கள் உள்ளன. இவற்றை தமிழ்நாடு அரசு தன் சொந்த செலவில் உருவாக்கி இருக்கிறது. இவற்றுக்கான துணைவேந்தர்களை தமிழ்நாடு அரசுதான் இதுவரை நியமித்து வந்தது.

எந்தத் துறையில் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்தாலும் அது ஆளுநரின் கையெழுத்துடன் தான் வெளியாகும். அதற்காக ஆளுநரே அந்த விஷயங்கள் அனைத்தையும் முடிவு செய்தார் என்று அர்த்தமல்ல.பல்கலைக்கழகங்களில் வேந்தராக ஆளுநரும், இணை வேந்தராக உயர்கல்வித்துறை அமைச்சரும் இருப்பார்கள். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் துணைவேந்தர் இருப்பார்.

துணைவேந்தர் பொறுப்பில் இருப்பவரின் பதவிக்காலம் முடிவடையும் போது, புதிய துணைவேந்தரை தேர்ந்தெடுப்பதற்கு தேர்வு குழு நியமிக்கப்படும். அது தகுதியுள்ளவர்களில் பெயர்களைத் தேர்ந்தெடுத்து தரும்போது, அதில் ஒருவரை அரசு நியமிக்கும் பழக்கம் இதுவரை இருந்து வந்தது.

தமிழ்நாடு ஆளுநராக பொறுப்பேற்ற ஆர்.என்.ரவி அதனை தனது சொந்த அதிகாரமாக மாற்றிக் கொண்டார். 2022 ஆம் ஆண்டு, தேர்வு குழு தந்த பெயர்ப் பட்டியலில் இருந்து, வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களுக்கு அவர் தன்னிச்சையாக துணை வேந்தர்களை நியமித்தார்.

இதனால், பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கும் வகையில் 2022 ஏப்ரல் 25ஆம் தேதி அன்று ஒரு சட்ட முன் வடிவை தமிழ்நாடு சட்டப்பேரவை நிறைவேற்றியது. அது ஆளுநருக்கு ஏப்ரல் 28ஆம் தேதி அன்று அனுப்பி வைக்கப்பட்டது. இதுவரை ஆளுநர் அதில் கையெழுத்து இடவில்லை. தான் கையெழுத்திடவில்லை என்றால், அந்த சட்ட முன்வடிவு ஏற்கப்படவில்லை என்று பொருள் என ஒரு முறை ஆளுநர் ரவி கூறினார். உண்மையில் அவ்வாறு திருப்பியும் அனுப்பாமல் கையெழுத்தும் இடாமல் ஆளுநர் தன்னிச்சையாக சட்டப்பேரவையின் முடிவை ஏற்க மறுக்கும் அதிகாரத்தை அரசியல் சாசனம் அவருக்கு வழங்கவில்லை.

ஆளுநருக்கு உள்ள அதிகாரத்தை, தமிழ்நாடு அரசு தனக்கு மாற்றிக் கொள்வது சரியா? என்ற கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால், வினாவை தொடுப்பவர்கள் உச்சி மீது வைத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கும் குஜராத் மாநிலம் ஏற்கனவே இதே போன்ற சட்டத்தை நிறைவேற்றி, அது செயல்பாட்டில் உள்ளது. தெலுங்கானாவிலும் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கே உள்ளது.

தனது அதிகார எல்லைகளை ஏற்கனவே தாண்டிவிட்ட ஆளுநர், ரவி, தற்போது இன்னும் மீறி, சென்னை பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், ஆசிரியர் பயிற்சி பல்கலைக்கழகம் ஆகியவற்றின் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்வு குழுவை அவராகவே தன்னிச்சையாக அறிவித்துள்ளார்.

இதில் பல்கலைக்கழகத்திலிருந்து இடம்பெறும் இரண்டு பேரோடு சேர்த்து, ஆளுநரின் பிரதிநிதி, யுஜிஜி பிரதிநிதி ஆகியோரையும் சேர்த்து நான்கு உறுப்பினர்கள் உள்ளனர். இதுவரையில் மூன்று உறுப்பினர்கள் மட்டுமே இருந்துள்ளார்கள். இதற்கு முந்தைய நியமனங்களில் யூசிஜி பிரதிநிதி இல்லை.

தமிழ்நாடு அரசு உருவாக்கி செயல்படுத்திக் கொண்டிருக்கும் இந்த பல்கலைக்கழகங்களுக்குத் துணைவேந்தர்களை நியமிக்க, தெற்கு பிகார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் எச்சிஎஸ் ரத்தோர், கர்நாடகாவில் உள்ள மத்திய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பட்டு சத்திய நாராயணா, யூசிஜி சார்பாக சுஷ்மா யாதவா போன்றோரை எல்லாம் ஆளுநர் நியமித்திருக்கிறார்.

இதன் மூலம் தேர்வுக் குழுவில் ஒன்றிய அரசை சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் இடம் பெறுகின்றனர். இதன் மூலம் இனி தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் யார் என்று ஒன்றிய அரசால் தீர்மானிக்க முடியும் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆகாய விமானம், பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை, செயற்கைக் கருத்தரிப்பு, அணுசக்தி தொழில்நுட்பம் அனைத்தும் வேத காலத்திலேயே இருந்தன என்றும், வேதங்களை கற்றுக் கொடுப்பதே மிகச் சிறந்த கல்வி முறை என்றும் அறிவியலுக்கு எதிரான விஷயங்களைக் கொள்கையாகக் கொண்டவர்கள், தமது நிலைபாடுகளுக்கு ஆதரவானவர்களையே இனி தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களாக நியமிப்பார்கள்.

தமிழ்நாடு அரசாங்கத்திற்கு எதிராக செயல்படுவது ஆளுநர் ரவியின் குறிக்கோள் என்பது நாடறிந்தது. ஆனால் பல்கலைக்கழகங்களின் விதிகளை, சட்டங்களை மீறுதல், மாநில அரசின் அதிகாரத்தை தான் கைப்பற்றுதல், பாடத்திட்டங்களை தனது நம்பிக்கையின்படி வரையறுத்தல் ஆகியவை தமிழ்நாட்டு மக்கள் மீதும், தமிழக மாணவர்களின் உயர்கல்வி உரிமை நடத்தப்படும் அப்பட்டமான வன்முறைத் தாக்குதலாகும். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

இதனை எதிர்த்து மாணவர்கள் மட்டுமின்றி, ஒட்டுமொத்த தமிழ் சமூகமும் கிளர்ந்தெழுவது காலத்தின் தேவையாகும்.

# சனாதனம் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளாது

**டி.ராஜா குற்றச்சாட்டு**

சனாதனம் என்பது மாற்றத்தை ஏற்றுக்கொள்ளாத ஒரு தத்துவப் பார்வை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று சென்னை பாலன் இல்லத்தில், 8/9/2023 அன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் கூறியனார்:

### மாறுதல்களை ஏற்காத சனாதனம்

இன்றைக்கு நாட்டில், விரிவாக விவாதிக்கப்படுவது சனாதனம் என்பது. இதை பிரச்சினையாக மாற்றியது பா.ஜ.க தான். சனாதனம் என்பது மாற்றத்தை ஏற்றுக்கொள்ளாத ஒரு தத்துவப் பார்வை இயற்கை, மானுட சமுதாயம், சிந்தனைகளிலெல்லாம் தொடர்ச்சியாக மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனை சனாதனம் ஏற்றுக்கொள்வதில்லை. இதைப் புரிந்துகொள்ள டாக்டர் அம்பேத்கர், மகாத்மா காந்தியின் வாழ்க்கையிலிருந்து சிலவற்றை தெரிந்துக்கொள்ள வேண்டும். அம்பேத்கர், ஜாதியக் கட்டமைப்பை உடைக்க வேண்டுமென்று கூறினார். அப்போது தான் சனாதனம் என்ற பேரில், ஜாதிய கட்டமைப்பு இந்து மதத்தின் அடிப்படை நெறி என்று எதிர்த்தார்கள். அப்போதுதான் அம்பேத்கர் 'இந்துமதத்தின் புதிர்கள்' என்று எழுதி சனாதனத்தை அம்பலப்படுத்தினார்.



காந்தி தீண்டாமைக்கு எதிராக பேசிய போது, சனாதன வெறியர்கள் எதிர்த்தனர். அப்போது தான் காந்தி, சனாதனவாதி யாரென்று விரிவாக பேசி யிருக்கிறார். இவை நம் கண்முன்னால் இருக்கும் உண்மைகள். அம்பேத்கர், காந்தியை உதட்டளவில் பேசுவது, அவர்களுடைய கொள்கைகளை, நாசகார கொள்கைகளாக எடுத்துகாட்டுகிறது பா.ஜ.க. சனாதனம் என்பது மாற்றத்தை எடுத்துக்கொள்ளாதது, ஜாதியக் கட்டமைப்பை பாதுகாக்கிறது, பெண்ணடிமைத்தனத்தை நிலைநிறுத்த விரும்புகின்றது. எனவே, சனாதனம் முறியடிக்கப்பட வேண்டுமென்று பேசுவதில் எந்த தவறும் இல்லை. ஆனால் பா.ஜ.க வினர் அதை, இந்து மதத்திற்கு எதிரானதாக திசைதிருப்புகிறார்கள்.

### குற்றவுணர்ச்சியில் செயல்படும் ஆர்.எஸ்.எஸ்.

பாரதிய ஜனதா கட்சி, ஆர்.எஸ்.எஸ். ஒரு குற்ற உணர்வுக்கு உள்ளாகி செயல்படுகிறார்கள். சுதந்திர போராட்டக் காலத்தில், அவர்களின் பங்கு எதுவும் கிடையாது. அதன் காரணமாகவே, இந்திய சரித்திரம் ஏதோ தங்களிடமிருந்து தான் தொடங்குகிறது என சிந்திக்கவும், செயல்படவும் தொடங்கியிருக்கிறார்கள். இந்தியாவினுடைய சரித்திரத்தையே புரட்டி எழுத வேண்டுமென்று முயற்சிக்கிறார்கள். இந்திய நாடு என்ற கட்டமைப்பையே மாற்ற வேண்டுமென்ற கொள்கைக்கு உட்பட்டு செயல்படத் தொடங்கி யிருக்கிறார்கள். அதன் விளைவு தான். ஒரு நாடு, ஒரு தேர்தல் என்பது.

### பன்முகத் தன்மைக் கொண்ட நாடு இந்தியா

இந்தியா பன்முகத் தன்மைக் கொண்ட நாடு. அதை ஒற்றைப் பரிமாண நாடாக்க பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ் முயற்சிக்கின்றனது. இந்திய நாட்டில், பல மொழிகள் பேசப்படுகின்றன, பல்வேறு கலாச்சாரங்கள் பின்பற்றப்படுகின்றன. இதை ஒற்றைப் பரிமாண நாடாக மாற்ற நினைப்பது ஏற்புடையதுதானா? செயல்படுத்தக்கூடியதுதானா? என மக்கள் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஒரு நாடு, ஒரு கலாச்சாரம் என்று பேசத் தொடங்கி, ஒரு நாடு, ஒரு மொழி. ஒரு நாடு, ஒரு வரி. இப்போது ஒரு நாடு, ஒரு தேர்தல். இன்னும் கொஞ்ச காலம் கழிந்தால் ஒரு நாடு, ஒரு கட்சி. ஒரு நாடு, ஒரு தலைவர் என்று போகக்கூடிய அபாயமிருக்கிறது. இதைதான் எதேச்சதிகாரம், சர்வாதிகாரம், ஜனநாயக நெறிமுறைகளை குழிதோண்டி புதைக்கிற செயல் என்று குறிப்பிடுகின்றோம்.

### ஒரு நாடு, ஒரு தேர்தல் என்பது புதிதல்ல

ஒரு நாடு, ஒரு தேர்தல் என்பது புதிதாக சொல்லப்படுவது அல்ல. நம்முடைய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட காலத்திலேயே இப்படிபட்ட பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. டாக்டர் அம்பேத்கர், மற்ற தலைவர்களெல்லாம், தொலைநோக்கோடு இதைப்பற்றி விவாதித்திருக்கிறார்கள்.

இந்தியா என்பது எப்படிப்பட்ட நாடு என்கிற போது, அம்பேத்கர் குறிப்பிட்டார், "INDIA THAT IS BHARATH, SHALL BE A UNION OF STATES". இன்னும் சொல்லப்போனால் அரசியல் சட்டத்தின் வரைவு குழுவிற்கு முன்வைத்த அறிக்கையில், "UNITED STATES 0F INDIA" என்று கூட குறிப்பிட்டிருக்கிறார். அரசியல் சட்டத்தில் "UNION OF STATES" என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

அப்படி என்றால் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு தேர்தல் நடைபெறுகிறது. மாநில சட்டமன்றங்களுக்கு 5 ஆண்டு, கால நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல மக்களவைக்கு ஒரு தேர்தல் அதற்கு 5 ஆண்டு, கால நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் தான், நமது தேர்தல் ஆணையம் என்பது தேர்தலுக்கு, தேர்தல் அமையும் தற்காலிக ஆணையமல்ல, நிரந்தரமான ஒரு பொதுவான ஆணையமாக செயல்பட வேண்டுமென்பதெல்லாம், அன்றைக்கே வலியுறுத்தியிருக்கிறார்கள்.

ஒரு நாடு, ஒரு தேர்தல் என்று சொன்னால், கர்நாடகாவில் இப்போது தான் தேர்தல் நடைபெற்றது. தமிழ்நாட்டில் 2 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. உத்தரப்பிரதேசத்தில் தேர்தலை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இங்கேயெல்லாம் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி ஆட்சிக்கலைப்பு ஏற்படுமா?. நடைமுறை சாத்தியமற்ற ஒன்றை, இந்தியாவில் ஒன்றிய அரசு திணிக்க முயற்சிக்கிறது. இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமல்ல, பல்வேறு கட்சிகளும் ஏற்க முடியாது என்று கூறி யிருக்கிறார்கள். பா.ஜ.க பொறுப்புக்கு வந்ததிலிருந்து குறிப்பிடும்படியாக எதுவும் செய்யவில்லை.

### நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் இந்தியா

இன்றைக்கு நாடு பல நெருக்கடிக்கு உள்ளாகி யிருக்கிறது. என்னதான் நிர்மலா சீதாராமன் இந்தியா வளர்ந்திருக்கிறது என்று சொல்லிக்கொண்டாலும், உண்மையில் பணவீக்கம் அதிகரித்திருக்கிறது, இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடைந்திருக்கிறது. விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. இவற்றுக்கெல்லாம் மோடி ஆட்சியில் பதிலேதும் இல்லை.


அரசியல், சமூக தளங்களில் பல முரண்பாடுகள், கொந்தளிப்புகள் ஏற்பட்டுள்ளன. சிறுபான்மையினரின் மீது நடக்கும் குரூரமான தாக்குதல் மட்டுமல்ல, தலித்கள், பெண்கள், குழந்தைகள் மீதானதாக்குதல்கள் அதிகரித்தே வருகின்றன. எனவே தான் பா.ஜ.க ஆட்சி அகற்றப்பட வேண்டுமென்ற குறிக்கோளுடன் 'இந்தியா' கூட்டணி உருவாகியுள்ளது. இதை திசை திருப்பவும், மக்களைப் பிளவுபடுத்தி மோதவிட வேண்டுமென்று முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு டி.ராஜா கூறியுள்ளார்.



த.லெனின்

# இந்தியாவும் பாரதமும் ஒன்னு இதை அறியாதவன் வாயில் மண்ணு!




பாஜகவுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணி அமைந்த உடன் பிரதமர் மோடிக்கும் பாரதிய ஜனதா கட்சிக்கும் இந்தியா என்றாலே கசக்கும் பொருளாகிவிட்டது. ஆட்டை கடித்து மாட்டை கடித்து பின் மனிதனை கடிக்கும் செயல் போல இப்போது அரசு நிகழ்ச்சி நிரலில் இந்தியா என்ற பெயர் நீக்கப்பட்டு பாரதம் என்பதுதான் இப்போது அரசால் அனைத்து இடங்களிலும் பரப்பப்படுகிறது.

அதுவும் சர்வதேச அளவிலான ஜி 20 மாநாட்டில் கூட பிரதமருக்கு முன் அமைக்கப்படும் நாடுகளின் பெயரில் பாரத் என்றே குறிப்பிட்டிருந்தது குடியரசுத் தலைவரின் அழைப்பிதழிலும் பாரத் என்றே குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தப் பெயர் மாற்றத்திற்கான காரணங்களாக பாஜகவினர் தொடர்ந்து சொல்வது இந்தியா என்பது பிரிட்டிஷ் காலணி ஆதிக்கத்தின் சொல் எனவே அது அகற்றப்பட வேண்டும் என்பதுதான். ஆனால் உண்மையில் இந்தியா என்ற சொல் ஹிந்து என்கிற பாரசீகச் சொல்லிலிருந்து கிடைத்த ஒன்று சிந்து நதியின் தீரத்தில் வாழ்ந்தவர்களை குறிக்க அவர்கள் அழைத்த பெயர்தான் அது! கிரேக்கர்கள் இந்தியா என்பதை அழைக்க தொடங்கினர் அவர்கள் பிரிட்டிஷாருக்கு முன்பே இந்தியாவின் கடல் வணிகம் மேற்கொண்டவர்கள். மெகஸ்தனிஸ் எழுதிய புத்தகத்திற்கு பெயரை இண்டிகா என்பது தான்.

அது போலவே வாஸ்கோடகாமா இந்தியாவிற்கான கடல் வழியை காண கப்பலில் புறப்பட்டபோது திடீரென மேற்கிந்திய தீவுகள் பகுதியில் கரை இறங்கினார் அங்கிருந்த கருப்பின மக்கள் இந்தியரின் சாயலில் இருந்த காரணத்தால் அதற்கு மேற்கிந்திய தீவுகள் என்று பெயர் சூட்டப்பட்டு இன்றளவும் அழைக்கப்படுகிறது. இந்து மதம் கூட தனது பெயரை பாரசீக மொழியில் தான் பெற்றது. அதற்காக அதன் பெயரை மாற்ற இவர்கள் துணிவவார்களா?

நமது நாட்டை இந்தியாவிற்கு பதிலாக பாரத் என அழைக்க கோரப்பட்ட பொதுநல மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் இப்போது இருப்பதையே அப்படியே பயன்படுத்தலாம் என்று தீர்ப்பளித்து விட்டது.

## இந்தியா பெயரை மாற்ற வேண்டிய உடனடி அவசியம் என்ன?

ஆத்மநிர்பவ பாரதத்தை ஊக்குவிக்க இப்படி பெயரை மாற்றுவதை ஏற்க முடியாது சுயம் இல்லாத நமது பழைய பாரம்பரியத்தை அங்கீகரிக்க முடியாது.

இந்த நாடு கடந்த காலங்களில் பல பெயர்களால் அறியப்படுகிறது, இது செப்டம்பர் 18, 1949 அன்று அரசியல் நிர்ணய சபை விவாதத்தின் போது பாரத், ஹிந்துஸ்தான், ஹிந்த் மற்றும் பாரத்பூமி அல்லது பாரத்வர்ஷ் என்று முன்மொழியப்பட்டது, மேலும் அத்துடன் ஹோடு போன்ற பல பெயர்கள் இருந்தன (ஹோடு என்பது இந்தியாவின் விவிலிய ஹீப்ரு பெயர் மற்றும் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது), தியான்சு (இது கிழக்கத்திய அறிஞர்களால் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட சீன மற்றும் ஜப்பானிய பெயர். அவர்களின் பயணத்தின் போது, அவர்கள் சிந்து நதியின் எல்லையில் ஒரு பகுதியைக் கண்டார்கள்), நாபிவர்ஷா (பழைய நூல்கள் இந்தியாவைக் இப்படி குறிப்பிடுகின்றன நாபிவர்ஷா என்ற இப்பெயருக்கு 2 காரணங்கள் உள்ளன. நாபி, பூமி முழுவதையும் ஆண்ட மனிதனின் மகன். நாபி இந்தியாவை ஆண்டதால், அது நாபிவர்ஷா என்று அழைக்கப்பட்டது.

சமஸ்கிருதத்தில் நாபி என்றால் தொப்புள் மற்றும் மையம் என்று பொருள். பூகோளத்தில் பார்த்தால், இந்தியா தொப்புளாகவோ அல்லது பூமியின் மையமாகவோ தோன்றுகிறது ஜம்புத்வீபா ('ஜம்பு ட்ரெஸ் நிலம்') அதாவது நாவலந்தீவு ஆர்யவர்தா (இந்தியா முழுவதும் இல்லாவிட்டாலும், இந்தியாவின் வடக்குப் பகுதிக்கு ஆர்யவர்தா என்று பெயர்) இந்த பெயர்கள் எல்லாம் நமது வரலாற்றில் குறிப்பிடப்படும் பெயர்களே ஆகும் இந்தப் பெயர்களும் முன்மொழியப்பட்டு விவாதிக்கப்பட்டது

அம்பேத்கர் முதலில் கொண்டு வந்த அரசமைப்புச் சட்ட முன்னுரையில் இந்தியா என்று தான் இருந்தது நீண்ட விவாதத்திற்கு பிறகு தான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 1வது சட்டப்பிரிவு வரைவுச் சட்டம் 1(1) இந்தியா, அதுவே பாரதம், மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும், என்று இறுதி முடிவு எடுக்கப்பட்டது பொதுவாக அரசமைப்புச் சட்டம் பிறக்கும்போதே தவிர அதற்கு இறப்பில்லை எனவே அதை மாற்ற விரும்புவது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான ஒன்று தானே தவிர வேறொன்றும் இல்லை.

மோடியின் தலைமையிலான பாஜகவின் ஆட்சி கடந்த 9 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது அவர்கள் அறிவித்த பல்வேறு திட்டங்கள் இந்தியாவின் பெயரை தாங்கி நிற்கிறது மேக் இன் இந்தியா, டிஜிட்டல் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா என்று அறிவித்த போதெல்லாம் அவர்களுக்கு பாரதம் கண்ணுக்கு தெரியவில்லையா?

பரப்புரை கூட்டங்களிலும் மான் கி பாத் உரைகளிலும் பிரதமரே 125 முறைக்கு மேல் புதிய இந்தியா பிறக்கிறது புதிய இந்தியா பிறக்கிறது என்று பேசியதெல்லாம் நமது பாரம்பரிய பாரதப் பெருமையை அவர் அறியாதலா?

சரி அப்படியே பாஜகவினர் கூறுவதைப் போல நமது கலாச்சாரத்தின் பின்புலத்திலிருந்து அவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அன்று பாரதம் என்ற நிலப்பகுதி மிகக் குறுகிய வட மாநிலங்களில் மட்டும் ஆண்ட ஒரு பகுதி மட்டுமே அது போதுமானதா? அது மட்டுமல்லாது அன்று 56 தேசங்களாக இன்று நாம் கூறும் பாரதம் இருந்திருக்கிறது அந்த 56 தேசங்களையும் மீண்டும் நமது பாரம்பரியம் என்று சொல்லி தனித் தனி நாடுகளாக உருவாக்கி விடுவார்களா?

மகாபாரத புராண கதையாடலோடு பாரதம் தொடர்பு கொண்டது பரதன் ஆண்டதால் பாரதம் என்ற பெயர் பெற்றது என்று பல்வேறு கருத்துகள் உள்ளன.

எந்த சட்ட முறையும் பின்பற்றி இந்தியாவின் பெயரை மாற்றாமல் அவர்களே மாற்றிக்கொண்டு இப்படி அழைத்துக் கொள்வது தான் பாசிச சர்வாதிகாரத்தின் உச்சம்!

## இந்தியா கூட்டணியால் ஏற்பட்ட பதற்றமா?

இந்தியா கூட்டணி பெரும் பலம் கொண்டு மக்களின் பேராதரவோடு இன்று எழுந்து நிற்கிற காரணத்தால் அதனை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள முடியாத பாஜக இந்தியா என்கிற பெயரையே முற்றுகையிட துணிந்து பாரதம் என்று அழைத்துக் கொள்கிறது நமது கேள்வி என்னவெனில் இந்தியா கூட்டணி பாரதத்தையும் தன் துணைக்கு அழைத்துக் கொண்டால் இவர்கள் என்ன செய்வார்கள்? ஒரு வேலை ஆரிய வர்த்தம் என்று அழைக்க தொடங்குவார்களோ!

அப்படி பெயரை மாற்றி தான் தீர வேண்டும் என்றால் நமது ஆதார் கார்டில் இருந்து அரசின் அத்தனை ஆவணங்களிலும் பெரும் செலவு செய்து பெயர் மாற்றத்தை செய்ய வேண்டும் நமது ரூபாய் நோட்டில் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா உட்பட அனைத்து இடங்களிலும் இந்தியா என்பதை மாற்றி பாரத் என்று மாற்றினால் தான் செல்லும் அப்படி எனில் நாடு மீண்டும் ஒரு பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும்! காலங்காலமாக இந்தியப் பெருங்கடல் என்றுதான் அழைக்கப்படுகிறது. அதை பாரதப் பெருங்கடல் என்றா மாற்ற முடியும்?

அது சாதாரண சாமானிய மக்களை என்ன பாடு படுத்தியது என்பதை கடந்த முறை நாம் கண்டோம்! அத்துடன் அப்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டால் இது மீண்டும் ஒருமுறை இந்தி திணிப்பாகவே அமையும் இந்திய தண்டனைச் சட்டம், இந்திய சாட்சியியல் சட்டங்களை சமஸ்கிருதத்தில் அரசியல் சாசனத்திற்கு எதிராக மாற்றியதைப் போல இதுவும் அமைந்துவிடும்!

## ஜின்னா வழியில் பாரதமா?

இந்திய பிரிவினையின் போது இந்தியா – பாகிஸ்தான் என்ற இரண்டு நாடுகளாக பிரிந்த அந்த தருணத்தில் இந்தியாவிற்கு இந்துஸ்தானம் அல்லது பாரதம் என்ற பெயரே இருக்க வேண்டும் என்று முகமது அலி ஜின்னா விரும்பினார். இதற்காக அவர் மவுண்ட் பேட்டன் பிரபுவுக்கும் தனிக் கடிதம் ஒன்றையும் எழுதி வலியுறுத்தியுள்ளார். ஆனால் அன்று நேருவும் நமது தலைவர்களும் இந்தியா என்ற பெயரே நீடிக்க வேண்டும் என்று முடிவெடுத்த காரணத்தால் ஐக்கிய நாடுகள் சபையில் நமது உறுப்பினர் அந்தஸ்து தொடர்ந்தது.

பாகிஸ்தான் புதிதாக தனது பெயரை சேர்க்க விண்ணப்பம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. ஜின்னா இந்தியாவிற்கு இந்துஸ்தான் என்றால் பாகிஸ்தானுக்கு மத ரீதியான ஒரு எதிரியை காட்டிடவே இப்படி முனைந்தார். ஆனால் இதற்கு இந்தியா இடம் கொடுக்காது . இந்தியா என்ற பெயரில் ஒரு மதச் சார்பற்ற தேசமாகவே நீடிக்க வைத்தது வரலாற்றில் ஒளி உமிழும் பக்கங்கள் ஆகும் ஆனால் ஜின்னா விரும்பிய பேரை இன்று ஆர் எஸ் எஸ் உம் பாஜகவும் கோருவது ஏற்கனவே அவர்கள் சாவர்க்கர் வழியில் இந்து இந்தியா இஸ்லாமிய இந்தியா என்ற இரட்டை இனங்களின் நாடு என்பதை நேசிக்கும் அதே வழி சிந்தனை போக்கே அன்றி வேறு என்ன? ஆக பாஜகவிற்கு வழிகாட்டுவது பாகிஸ்தானின் ஜின்னா!

இந்தியாவின் இந்தி பெயரே பாரதம்!

கடந்த 1987 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நாடாளுமன்றத்தில் மிருக பெரும்பான்மையாக 414 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்தபோது அரசமைப்புச் சட்டத்தின் 58 வது திருத்தத்தை கொண்டு வந்தது அதாவது அரசமைப்புச் சட்டத்தின் ஆங்கில உருவாக்கத்தை போலவே ஹிந்தியிலும் அதே காலத்தில் அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு அதனை குடியரசுத் தலைவர் உறுதிப்படுத்தி அதிகாரப்பூர்வமாக பயன்படுத்துவதற்காகத் தான் இச்சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அதன்படி அரசமைப்புச் சட்டத்தின் முதல் பிரிவு இந்தியா அதாவது பாரதம் என்பதை ஹிந்தியில் பாரத் கா சம்விதான் பாரத் அர்த்தத் இந்தியா என்று அழைக்கப்பட்டது அர்த்தாத் என்றால் அர்த்தம் என்று பொருள் அதாவது இந்தியா என்பதற்கு ஹிந்தியில் பாரதம் என்று தான் மொழி பெயர்க்கப்பட்டது அதற்காகத்தான் இந்த சட்ட திருத்தமும் கொண்டு வந்தது இதன் மூலம் சர்வதேச அளவில் நமது ஆவணங்கள் ஆங்கிலத்திலும் இந்திய அளவில் இரண்டு மொழியிலும் பயன்படுத்தும் முறை வந்தது கெசட் ஆஃப் இந்தியா அதாவது இந்திய அரசின் அரசிதழ் ஹிந்தியில் பாரத் கா ராஜ் பத்ரா என்று தான் அழைக்கப்படுகிறது. ஏன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஹிந்தியில் பாரதிய கம்யூனிஸ்ட் பார்ட்டி என்றும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) பாரதிய கம்யூனிஸ்ட் பார்ட்டி (மார்க்ஸ்பாடி) என்று இன்றளவும் அழைக்கப்பட்டு வருகிறது. ஆக இந்தியா ஹிந்தியில் மராத்தியில் பஞ்சாபியில் வங்காளத்தில் தெலுங்கு மொழியில் பாரத் என்று தான் அழைக்கப்படுகிறது ஆனால் தமிழில் மலையாளத்தில் ஒடியமொழியில் இந்தியா என்று தான் அழைக்கப்படுகிறது

## முழக்கங்களின் அரசியல்!

கவிஞர் இக்பால் எழுதிய உருது பாடலான சாரே ஜஹான் சே அச்சா இந்துஸ்தான் ஹமாரே ஹமாரே மிகவும் பிரபலமாக உள்ளது இந்திய ஆயுதப்படைகளின் அணிவகுப்பு பாடலாகவும் இது இன்றளவும் இருந்து வருகிறது.

வெள்ளையர்களை படை திரட்டி விரட்டிட இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்கிய நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உருவாக்கிய முழக்கம் ஜெய்ஹிந்த்! மாவீரன் பகத்சிங் தூக்கு கயிற்றை முத்தமிட்ட கடைசி வினாடியில் உரத்து முழக்கமிட்ட முழக்கம் இன்குலாப் ஜிந்தாபாத்!

ஆனால் ஆர்எஸ்எஸும் பாஜகவும் பயன்படுத்தும் வந்தே மாதரம் பிரிட்டிஷ் ராஜ விசுவாசி பக்கிம்சந்திரசேகர சட்டர்ஜியால் உருவாக்கப்பட்ட ஆனந்த மடம் என்ற நாவலில் இருந்து எடுக்கப்பட்டது ஆகும் "பாரத் மாதா கி ஜே" யும் அப்படி ஆனதே இந்த சொல்லாடல்களே முழக்கங்களே உணர்த்திவிடும் இவர்கள் யார் என்பதை!

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்க நெருங்க இன்னும் புதிய சொற்களும் புதிய முழக்கங்களும் அவர்களால் எழுப்பப்படும் ஆனால் இவர்கள் வெறும் வாய்ச்சொல் வீரர்கள் என்பதை நாட்டு மக்கள் உணர்ந்துள்ளார்கள் மக்களின் சுமையை குறைப்பதற்கு பதில் மக்களின் சுமையை மேலும் அதிகரிக்கவைத்ததுடன் பெரும் நிறுவனங்களின் பெரும் சுமைகளையும் கடன்களையும் ரத்து செய்து அவர்களுக்கான பிரதம சேவகனாகத்தான் இந்த ஆட்சியும் பிரதமரும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள்.

கடந்த 10 ஆண்டுகள் மக்களை பாஜக பந்தாடிய ஆண்டுகள் விடிவுகிட்ட இவர்களை ஆட்சி இருந்து அகற்றுவது ஒன்றுதான் ஒரே தீர்வு என்ற முடிவுக்கு மக்கள் வந்து விட்டார்கள் மாற்றம் ஒன்றே மாறாதது அதன் மகத்துவம் வரும் 2024ல் தெரியவரும்!

தொடர்புக்கு 9444481703



பி.எஸ்.மாசிலாமணி



**12 மாவட்டங்களின் வேளாண் உற்பத்திக்கும், 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களின் குடிநீர் ஆதாரத்திற்கும், தமிழக சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் அடிப்படையானது காவிரி.**

இதனால்தான் சமஸ்தானங்கள் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலும் கூட காவிரி ஒப்பந்தம் புதுப்பிக்கும் நிகழ்வு தொடர்ந்து வந்துள்ளது. வெள்ளப்பெருக்கின் போது வடிகாலாக சென்னை மாகாணத்தை பயன்படுத்திக் கொண்டு தன் பகுதிகளை பாதுகாத்துக் கொள்ளவே இப்படியான ஒப்பந்தங்களை மேல் பகுதி பாசனத்தாரர்கள் மேற்கொண்டு உள்ளனர்.

# தேவை காவிரி மேலாண்மை வாரியம்!

மாநிலங்களின் நியாயமற்ற குறுகிய அரசியல் நோக்கலும் தமிழ்நாடு பாதிக்கப்பட்டு வருகிறது. காவிரி நதிநீர் பங்கீட்டில் தமிழக உரிமை மட்டுமே உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இதுவரைவெளி யிடப்பட்ட மூன்று தீர்ப்புகளிலும் தொடர்ந்து நீர் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நடந்த நீண்ட நெடிய போராட்டங்களுக்கு பின் தான் உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி 1991 மார்ச்சில் நடுவர் மன்றம்அமைக்கப்பட்டு மூன்று மாதங்களில் இடைக்கால தீர்ப்பும் கிடைக்கப்பெற்றது. தீர்ப்பு வெளியான போது கர்நாடகத்தில் நடந்த கலவரம்தான் நமக்கு கிடைக்க வேண்டிய நியாயமான நீர் பங்கீடு இதுவரை கிடைக்காமல் எச்சரிக்கையாக உள்ளது.

இடைக்கால தீர்ப்புக்குப் பின் உச்சநீதிமன்றம் கர்நாடக அரசிடம் அறிவுறுத்தியது என்னவெனில்... தற்போதுள்ள 11.02 லட்சம் ஏக்கருக்கு மேல் சாகுபடியை அதிகரிக்க கூடாது என்பதாகும். ஆனால் 15 லட்சம் ஏக்கராக உயர்த்தியது .அதாவது 1960 முதல் தன் சாகுபடி பரப்பைஉயர்த்திக்கொண்டே வருகிறது.

காவிரி நீர் உரிய காலத்தில் உரிய அளவு கிடைக்க வாய்ப்பில்லாமல் தமிழக சாகுபடி பரப்பு 28 லட்சம் ஏக்கரில் இருந்து 18 லட்சம் ஏக்கராக குறைந்தது. குறுவை சாகுபடி காலமான ஜூன் முதல் செப்டம்பர் வரை கூடுதல் நீர் தேவைப்படும்.இக்கால நீர் பங்கீடு அளவு இறுதி தீர்ப்பில் குறைக்கப்பட்டுள்ளது.இந்த நீர் குறைவை ஆண்டு இறுதியில் கொடுக்கும் நீரில் உயர்த்தப்பட்டுள்ளது.பல ஆண்டுகளாக இதை பெருமழை காலங்களில், கர்நாடக மாநில பாதுகாப்பிற்காக திறந்துவிட்டு, தீர்ப்பின் படி திறந்து விட்டதாக கர்நாடகம் கணக்கு காட்டி வருகிறது.

இந்த நிலையில் விவசாயிகள் குறுவை மகசூலில் பயன்பெற்றிட, மழை கைகொடுக்கும் என நம்பி தமிழக அரசு ஜூன் 12ல் தண்ணீர் திறந்தது. விவசா யிகளும் மகிழ்ச்சியுடன் 5.20 லட்சம் ஏக்கர் அளவில் சாகுபடி செய்துள்ளனர்.மே, ஜூன், ஜூலை மாதங்களில் தீர்ப்பின்படி கர்நாடகம் நீரை திறந்து விடாததால் பயிரிட்ட குறுவைப் பயிர்கள் கருகி வந்த நிலையில், தமிழக அரசு ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியதுடன், அமைச்சர்கள் நேரடியாக சென்று ஆணையத்திடம் வலியுறுத்தி வந்தனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகிகளும் டெல்லி சென்று அமைச்சரிடமும்;ஆணையத்தலைவரிடமும் முறையிட்டோம். இப்படியான தொடர் நிர்ப்பந்த நிலையில்தான் ஆணையத்தின் கூட்டம் காலம் கடந்து கூட்டப்பட்டது. கண்காணிப்பு குழு கூட்டத்தில் கர்நாடக அரசின் உயர் அலுவலர்கள் ஒப்புதல் அளித்து கூறிய நீர் திறப்பு அளவையே. ஆணையக் கூட்டத்தில் கர்நாடகா அலுவலர்கள் மறுத்து கூறியது எப்படி ஒரு பொறுப்பான செயலாகும்.

ஆணையத்தின் தலைவரும் மௌனம் காத்த நிலையில் தான் கூட்டத்தில் பங்கு கொண்ட தமிழக நீர்வளத்துறை ஆணையர் கூட்டத்தை விட்டு வெளியேறி வந்து உச்சநீதிமன்றத்தில் முறையிடுவோம் என்று அறிவித்தார். இந்த நெருக்கடியான சூழலில்தான் ஆணையத்தின் தலைவர் மௌனம் கலைந்து 5000 க.அடி தண்ணீர் திறக்க உத்தரவிட்டார். அதையும் ஏற்கமறுத்து கர்நாடக அலுவலர்கள் கூட்டத்தில் இருந்து வெளியேறினர். உடனடியாக தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் முறையிட்ட சூழலில் தான்அவமதிப்பு நடவடிக்கைக்குஅஞ்சி கர்நாடகம் ஒப்புக்கு தண்ணீரை திறந்தது.

தற்போது பெருமளவில் டெல்டாவில் பயிர்கள் கருகி வருகிறது.வேறு வழியின்றி மாடுகள் மேய்ந்து வருகின்றன. ஆகஸ்ட் மாதம் முதல் சம்பா விதை பரவ வேண்டிய விவசாயிகள் என்ன செய்வது என கையறு நிலையில் உள்ளனர். இந்த நிலையில் தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை அவசரமாக விசாரித்து தண்ணீர் கிடைக்க செய்ய வேண்டிய உச்சநீதிமன்றம். 6ஆம்தேதி விசாரிப்பதாக கூறியதை மீண்டும் 27ஆம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளது என்பது டெல்டா விவசா யிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.

கர்நாடகம் தாக்கல் செய்துள்ள மனுவில், வடகிழக்கு பருவமழை கர்நாடகத்திற்கு கிடைக்காது. எனவே தன் மாநிலங்களில் உள்ள அணைகளில் பற்றாக்குறையாக உள்ள 56 சதம்நீரை கொண்டுதான் குடிநீர் மற்றும் சாகுபடிக்கு பயன்படுத்தி பாதுகாக்கமுடியும், வேறு வழியில்லை. ஆனால் தமிழகத்திற்கு செப்டம்பர் முதல் வடகிழக்கு பருவமழை கிடைக்கும்.எனவே நாங்கள் தண்ணீர் தர சாத்தியமில்லை என மனு செய்துள்ளது.

இந்த நிலையில் தீர்ப்பின் படி தண்ணீர் கிடைத்தால்தான் தமிழகம் பெரிய பாதிப்பிலிருந்து மீள முடியும்.மேட்டூரின் தற்போதைய நீர்இருப்பைக் கொண்டு இந்த பாதிப்புகளிலிருந்து நிச்சயம் மீள முடியாது. 15 லட்சம் சம்பா சாகுபடியும் சாத்தியமில்லை.

தீர்ப்பின்படி காவிரிநீர் பங்கீடு செய்திட காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திட வேண்டுமென 2013 மார்க் 19ல் உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்தது. ஆனால் உச்ச நீதிமன்றமோ மேற்பார்வை குழு அமைக்க உத்தரவிட்டது.

2013 ஆம் ஆண்டு கர்நாடகம் தண்ணீர் கொடுக்காத நிலையில் இதை விட கடுமையான பாதிப்பு தமிழகத்தில் ஏற்பட்டது. தமிழக அரசு மே 28 2013 அன்று 2450 கோடி ரூபாய் கர்நாடக அரசு இழப்பீடு வழங்கிட வேண்டுமென உச்ச நீதிமன்றத்தில் வழக்கு போட்டது. வழக்கம் போலவே தண்ணீர் திறந்து விட சாத்தியமில்லை என கர்நாடகா கை விரித்தது. இழப்பீடு கோரிய வழக்கு விசாரணை இன்றி போனது.

இதன் பின்னரும் பல ஆண்டுகளில் கர்நாடகம் தண்ணீர் கொடுக்க மறுத்துவந்த நிலையில்தான், காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதே தீர்வை கொடுக்கும் என 2016 ஆம் ஆண்டு மறுபடியும் தமிழக அரசு முறையிட்டது. அந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியினால் 400க்கும் மேற்பட்ட விவசா யிகள் மாண்டனர்.

இடைக்கால தீர்ப்பு வெளியானது முதல் பெரும்பகுதி ஆண்டுகளில் தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் முறையிட்டு வழக்காடித் தான் தமிழகத்திற்குரியநீர் பங்கீடு ஓரளவு கிடைத்து வந்துள்ளது. இதுதான் தமிழகம் வரும் காவேரிக்கு, கர்நாடகம் கொடுத்திருக்கிற விதி.மேகதாது அணைக்கட்டிட தமிழகம் அனுமதித்தால் இப்படியான பிரச்சனைகள் தீர்ந்து விடும் என்று கர்நாடக துணை முதல்வர் கூறுகிறார். மேகதாது அணை கட்டப்பட்டால் வேறொரு புதிய சிக்கலை கொடுக்குமேதவிர தமிழகத்தின் தற்போதைய பிரச்சனை தீராது.

இப்படி ஒவ்வொரு ஆண்டும் தமிழகம் தண்ணீர் கேட்டு போராடும் நிலைகளுக்கு ஒரு முடிவு வேண்டும். காவி ரிஆணையம் தன்னாட்சி பெற்றதுதான், ஆனால் ஆணையத்தின் தலைவரோ ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்வளத்துறை உயர் அலுவலர். இவர் ஒன்றிய அரசை கவனத்தில் கொண்டுதான் முடிவெடுக்கிறார் என்பது நிதர்சனம்.

காவிரி பாயும் மூன்று மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமலேயே மேகதாது அணையை கட்டிட ஆணைய கூட்டத்தில் விவாதப் பொருளில் சேர்த்த தலைவர்தான் இவர்.தமிழக அரசு அவசரமாக உச்சநீதிமன்றத்தில் முறையிட்டபின்தான் இதுவிவாதப்பொருளிலிருந்து நீக்கப்பட்டது என்பதை அறியலாம். கடந்த இரு மாதங்களாக போராடிய தமிழக அரசு. உச்சநீதிமன்றத்தில் முறையிட்ட பின்னும், ஒன்றிய அரசு எந்த அறிவுறுத்தலையும் ஆணையத்திற்கு கொடுக்கவில்லை!

எத்தனை ஆண்டுகள் நாம் காவிரிக்காக போராடுவது? இந்த இக்கட்டான நிலைகளில் இருந்து நிரந்தரமாக விடுபட, எதிர்கால நிலைகளையும் கணக்கில் கொண்டு உடனடியாக முடிவெடுக்க வேண்டும்.

**அ) மேட்டூர் அணையின் தற்போதைய நீர் இருப்பைக் கொண்டு எஞ்சிய குறுவையை பாதுகாத்திட, உரிய அளவு தொடர்ந்து நீர் திறந்து கள அலுவலர்கள் மூலம் கண்காணிப்பு செய்திட வேண்டும்.**

**ஆ) கருகி காய்ந்து மற்றும் இனி பிழைக்க வாய்ப்பு இல்லாது பாதிக்கப்பட்ட குறுவை சாகுபடியை கணக்கெடுத்து ஏக்கருக்கு ரூபாய் 35 ஆயிரம் நிவாரணம் வழங்கிட வேண்டும்.**

**இ) சம்பா சாகுபடி பணிகளை விவசாயிகள் தொடங்கிட உரிய அறிவுறுத்தலை வெளியிட வேண்டும். விவசா யிகளின் நம்பிக்கைக்கு மேற்கண்ட திட்டங்களை தமிழக அரசு உடனடியாக நடைமுறைப்படுத்திட வேண்டும்.**

**ஈ) தீர்ப்பின்படி தண்ணீர் கொடுக்காது டெல்டாவில் பாதிக்கப்பட்ட வேளாண்மைக்கான இழப்பீட்டை கர்நாடக அரசு கொடுத்திட வேண்டுமென உச்ச நீதிமன்றத்தில் தனி முறையீடு செய்திடவேண்டும்.**

**உ) 15 ஆண்டுகள் வரை நீர்பங்கீடு குறித்தான மேல் முறையீடு செய்ய முடியாது என்கிற தீர்ப்பு விதிக்கப்பட்டுள்ள நிலையில், இப்படி எத்தனை ஆண்டுகள் தீர்ப்பின் படி தண்ணீர் பெற போராடுவது? எனவே எதிர்வரும் ஆண்டுகளில் நமக்குரிய தண்ணீர் பெற்றிட தன்னாட்சி அதிகாரம் கொண்ட காவிரி மேலாண்மை வாரியத்தை அமைத்திட வேண்டும்**

என தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கிட வேண்டும் என்பது விவசா யிகளின் எதிர்பார்ப்பாகும்.

தொடர்புக்கு:9443865101

# ‘சனாதனம்’ என்ற சொல் தமிழ் இலக்கியத்தில் இல்லை




ஆர்.பாலகிருஷ்ணன் IAS
சிந்துவெளி ஆய்வாளர்

**சங்க இலக்கியம் முதல் பாரதியார் கவிதைகள் வரை தமிழ் இலக்கியப் பெருவெளி அறியாத சொற்பதம் "சனாதனம்" !**

**"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"** என்பது தொல்காப்பிய இலக்கணம்.


(தொல்.சொல். 157)

எல்லாச் சொல்லும் என்று கூறியதில் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் நால்வகைச் சொற்களும் அடங்கும்.
















**"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே.'** ( தொல். எச்ச.1,) என்று பிறமொழிச் சொற்கள் தமிழில் பயின்று வரும் முறை பற்றியும் தொல்காப்பியர் எச்சவியலில் பேசுகிறார்.

வடசொற்களை தமிழில் பயன்படுத்தும் முறை பற்றியும் அவர் தெளிவுபடுத்துகிறார்.

**"வடசொல் கிளவி வட எழுத்து ஒரீஇ**

**எழுத்தொடு புணர்ந்த சொல் ஆகும்மே."**
(தொல். எச்ச.5)

அண்மையில் "சனாதனம்" என்ற "சொல்"; அதன் பொருள் மற்றும் அச்சொற்பொருள் சார்ந்த கருத்தியல் மற்றும் கோட்பாடுகள் பற்றி பொதுவெளியில் பரவலாக, பரபரப்பாக விவாதிக்கப்படுகிறது.

எனவே இச்சொல் தமிழ் இலக்கியப் பரப்பில் எப்போது? எங்கு? யாரால் பயன்படுத்தப்பட்டது என்ற தேடல் தேவைப்படுகிறது. இதில் நம்முடைய நோக்கம் இச்சொற்பயன்பாடு தமிழில் இருக்கிறதா? இருந்தால் எத்தகைய பொருளில் பயன்படுத்தப்படுகிறது என்பதை முதலில் பதிவு செய்வதே ஆகும்.

இதற்காக தமிழ் இலக்கியப் பரப்பை பழந்தமிழ் இலக்கியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெரும் காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் என்று வகைப்படுத்தி ஒன்றன்பின் ஒன்றாக பதிவு செய்யலாம்.

இந்தத் தேடலில் நமக்கு உற்ற துணையாக பயன்படுவது கணிதப் பேராசிரியர் பா. பாண்டிய ராஜா மிகமுயன்று தொகுத்து இணையத்தில் அனைவரது பயன்பாட்டிற்குமாக வெளியிட்டுள்ள தொடரடைவுகள் என்பதை நன்றியுடன் பதிவு செய்வது நமது கடமையாகும்.

**"சகரக் கிளவியும் அதனோரற்றே**

**அஐஔ எனும் மூன்றலங் கடையே"** என்று இலக்கணம் வகுத்த தொல்காப்பியத்தில் "சனாதனம்" என்ற சொல் இருக்கிறதா என்று தேடுவதே நியாயம் இல்லை தான். இருந்தாலும் " இல்லை" என்று பதிவிடும் முன்பு முறைப்படி தேடிப்பார்த்தேன். "இல்லை".

சங்க இலக்கியம் எந்தவொரு தனிச் சமயத்தையும் தனியொரு கடவுளையும் முன்னிறுத்தவில்லை.எனினும் திணை சார்ந்த கடவுள்கள்; ஆண் பெண் தெய்வங்கள்; நம்பிக்கை மரபுகளுக்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் இடம் பெறுவதால் சனாதனம் என்ற சொல் சங்க இலக்கியங்களில் இடம் பெறுகிறதா? "இல்லை" என்பது தான். (பரிபாடல் திருமுருகாற்றுப்படை யிலும் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது) சங்க இலக்கியங்களில் சகடம், சதுக்கம், சரணத்தர், சலதாரி, சனம், சங்கம், சக்கரம், சங்கு, சபை, சந்தனம், சமயத்தார் போன்ற சொற்கள் உள்ளன. ஆனால் சனாதனம் என்ற சொல் இல்லவே இல்லை.

அடுத்து பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அடிப்படையில் நீதி நூல்கள். சனாதனம் என்பது ஒரு "தர்மம்" என்பதை கருத்தில் கொண்டு பதினெண்கீழ்க்கு நூல்களின் தொடரடைவுகளைத் தேடினேன்.இதில் திருக்குறள், நாலடியார், திரிகடுகம், ஏலாதி போன்ற நூல்கள் அடங்கும். சனாதனம் என்ற சொல்லாடல் இந்நூல்கள் எவற்றிலும் இடம்பெறவில்லை.

**"இரட்டைக் காப்பியங்கள்"** என்று போற்றப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலையிலும் பல்வேறு சமயக்கோட்பாடுகள் உள்ளன. ஆனால் சனாதனம் என்ற சொல் இடம் பெறவே இல்லை.

மணிமேகலை சேரநாட்டு வஞ்சிமாநகரில் ஒன்பது சமயக் கணக்கர்களைக் கண்டு அவர்களின் சமயக்கோட்பாடுகள் பற்றிக் கேட்டறிந்தாள். அவள் பின்பற்றியது பௌத்த சமயம். மணிமேகலை சந்தித்த அளவைவாதி, சைவவாதி, பிரமவாதி, வைணவாதி, வேதவாதி, ஆசீவகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி,வைசேடிகவாதி, பூதவாதி என்ற இந்த சமயக்கணக்கர்களில் யார் சனாதனவாதி என்பது தெரியவில்லை.

ஏனெனில்சனாதனம்என்றசொல்லாடலே மணிமேகலையில் இல்லை. சைவம், வைணவம், வேதம் ஆகியவை தனித்தனி கோட்பாடுகளாகவே குறிப்பிடப்பட்டுள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

ஐம்பெரும் காப்பியங்களில் அடங்கிய ஏனைய காப்பியங்களான சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய நூல்களிலும் சனாதனம் என்ற சொல் இடம்பெறவில்லை . இந்த நூல்கள் சமண பௌத்த கருத்தியல்கள் சார்ந்தவை. சீவக சிந்தாமணி வளையாபதி குண்டலகேசி ஆகிய இலக்கியங்கள் ஒருவகையில் வடபுலத் தொடர்பு உள்ளவையே ஆகும்!

**"மூவா முதலா உலகம் "** என்ற கடவுள் வாழ்த்தோடு தொடங்கி எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தவேண்டும்; நன்றி மறவாமை போன்ற அறக்கருத்துகளையும் வலியுறுத்தும் சீவக சிந்தாமணியிலும் சனாதனம் இல்லை ! வளையாபதி குண்டலகேசி ஆகிய நூல்களிலும் சனாதனம் என்ற சொல் இல்லை !

கம்பராமாயணம்,தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யபிரபந்தம் உள்ளிட்ட பக்தி இலக்கியங்களில் இருக்கக்கூடுமோ என்ற வினாவுடன் பாண்டியராஜாவின் தொடரடைவை துழாவினேன். வியப்பாகத்தான் இருக்கிறது இவை எவற்றிலுமே சனாதனம் என்ற சொல் இல்லவே இல்லை.

கம்பராமாயணத்தில் சலம், சனம், சழக்கு, சவரி, சழக்கியர் எல்லாம் இருக்கிறது. ஆனால் சனாதனமோ சனாதனியோ இல்லவே இல்லை.

மூவர் தேவாரத்திலும் அதே கதை தான்.சனாதனம் என்ற சொல் இல்லவே இல்லை. சைவக் குரவர்களாகிய நாயன்மார்கள் பற்றிய சேக்கிழார் எழுதிய பெரிய புராணத்தில் சதுக்கம், சதுர், சதயம், சந்தனம், சந்திரன், சபை, சமயம், சரணம் என்று வடமொழி சார்ந்த சகர முதலான ஏராளமான சொற்கள் உள்ளன; ஆனால் சனாதனம் இல்லை.

இந்தியத் துணைக் கண்டத்தின் மிகமுக்கியமான வைணவ இலக்கியத். தொகுப்பான நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் சமணம், சமயம், சரணம், சன்மம் என்பது போன்ற பல சொற்கள் இருந்தாலும் சனாதனம் இல்லை.

ஐஞ்சிறுங்காப்பியங்களிலும் சனாதனம் இல்லை.பெருங்கதையிலும் இல்லை. வில்லிபாரதத்தில் சன்பதம் இருக்கிறது ஆனால் சனாதனம் இல்லை.

சன்மார்க்கம், சற்குரு, சமரசம் போன்ற சொல்லாட்சிகள் இடம்பெறும் திருவருட்பாவிலும் சனாதனம் இல்லை. தாயுமானவர் பாடல்களிலும் இல்லை. கலிங்கத்துப் பரணியில் "சலுக்குமுலுக்கு" என்ற சொல்லாட்சி கூட இருக்கிறது; ஆனால் சனாதனம் இல்லை.

நளவெண்பா, திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, அபிராமி அந்தாதி, மதுரைக்கலம்பகம், கச்சிக்கலம்பகம் உள்ளிட்ட சிற்றிலக்கியங்கள் எவற்றிலும் சனாதனம் இல்லை.

சதுர்வேதம், சந்திரமவுலி, சர்க்கார், சக்கரம், சக்தி, சங்கரன், சங்கராசார்யன் என்றுஎத்தனையோ அயற்சொல்லாட்சிகளை கையாளும் மகாகவி பாரதியாரும் தனது கவிதைகளில் சனாதனம் என்ற பதத்தை பயன்படுத்தவே இல்லை. இவ்வாறு சங்க இலக்கியம் தொடங்கி பாரதியார் கவிதைகள் வரை தமிழ் இலக்கியப்பரப்பு நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ சந்தித்திராத சொல் சனாதனம்.

மேலும் கல்வெட்டுக் கலைச்சொல் அகர முதலி யில் தேடிப் பார்த்தேன். அதிலும் சனாதன, சநாதன, ஸனாதன போன்ற சொற்பயன்பாடு எதனையும் காண இயலவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்கால தமிழ் உரைநடைகளில், புதினங்களில், ஏனைய புனைவு இலக்கியங்களில், திறனாய்வுகளில் சனாதனம் என்ற சொல் எந்த அளவிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது? சனாதனம் சார்ந்த கருத்தியலுக்கு எதிரான கருத்தியல்கள் எவ்வாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் தனது **"பாதையில் பதிந்த அடிகள்"**

**பாகம் 1 (அத்தியாயம் 116) நூலின்**

முன்னுரையில் சனாதனம் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

"ஒரு தேசிய வரலாற்றில் எந்த ஒரு மக்கள் இயக்கமும் பெண்கள் சம்பந்தப்படாததாக இருக்க முடியாது. ஒரு சமுதாயத்தின் இயக்கத்தை அச்சாணியாக நின்று இயக்குபவர்கள் பெண்களே என்றாலும் கூட மிகையில்லை. ஏனெனில் அதன் சாதக, பாதகமான பாதிப்புக்களை முழுமையாகத் தாங்குபவர்களும் அவர்களே தாம். ஆனால் ஒரு தேசிய வரலாற்றையோ, சமுதாய வரலாற்றையோ கணிப்பவர்களும், பதிவு செய்பவர்களும் பெண்ணின் முக்கியத்துவத்தை அத்துணை உயர்வாகக் கருதுவதில்லை."

"பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக, பெண்கள் சனாதன சமயக் கொடுமைகளுக்கும் சமூகப் புறக்கணிப்புக்கும் உள்ளாகி ஒடுக்கப்பட்டிருப்பதால், அவற்றை மீறுவதற்கே போராளியாக மாறவேண்டி இருக்கிறது."



அருண் நெடுஞ்செழியன்

# ஜி 20 மாநாடு

# கார்பரேட்டு சாமானியர்

**ஜி20 மாநாடு, நாடுகளுக்கு இடையிலான புவிசார் அரசியலை விவாதிக்கிற களமாக அல்லாமல், பொருளாதார ஒத்துழைப்பை ஒருங்கிணைக்கிற கூட்டமைப்பாக உள்ளது. இதனால்தான் மாநாட்டிற்கு அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி உலக வங்கியின் தலைவர் முதல் பன்னாட்டு நிதியத்தின் (ஐஎம்எப்) தலைவர்கள், தொழிலதிபர்கள் வரை பங்கேற்கின்றனர். ஒரு பக்கம் மாநாடு நடைபெற்றாலும், மறுபக்கம் பல்வேறு நாடுகளுடன் பொருளாதார ஒப்பந்தங்களும் விவாதிக்கப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன.**

தலைநகர் டெல்லியில் ஜி20 நாடுகளின் 18 ஆவது உச்சி மாநாடு அண்மையில் முடிவடைந்தது. இந்த மாநாடு மோடியின் அரும் பெரும் சாதனை போலவும்; உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை மோடி தூக்கிநிறுத்திவிட்டார் என்றும், ஜி20 மாநாட்டு நிகழ்வை மோடியின் சொந்த சுயமோக அரசியலாக பாஜக பரப்புரை செய்து வருகிறது. அடுத்த சில மாதங்களில் நடைபெறவுள்ள ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்கு ஜி20 மாநாட்டு நிகழ்வையே பிரதான சாதனையாக மடைமாற்றுகிற உத்தியை பாஜக மேற்கொள்வது கண்கூடாகத் தெரிகிறது.

“பிரதமர் மோடி தலைமையின் கீழ் தெற்குலக நாடுகளின் குரலாக இந்தியா உருவெடுத்துள்ளது” என்று பாஜக தேசியத் தலைவர் நட்டாவும்; தெற்குலக நாடுகளுக்கு மோடி அங்கீகாரத்தை பெற்றுத் தந்துள்ளார் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் அறிக்கை விடுத்துள்ளனர். இப்படி பிரதமர் மோடியை தெற்குலக நாடுகளின் பிரதி நிதியாக, மேற்குலகத்திற்கு மாற்றான சக்தியாக பாஜக பரப்புரை செய்வதைக் காண முடிகிறது. மேலும் ஜி20 மாநாட்டில் இந்தியா முன்வைத்த டெல்லி பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை மகத்தான ராஜதந்திர சாதனையாக பாஜக விதந்து பரப்புரை செய்துவருகிறது. ஆனால் நடந்து முடிந்த மாநாடு புதிதாக எதையும் சாதிக்கவில்லை என்பதே எதார்த்த உண்மை.

டெல்லி பிரகடனமானது உக்ரைன் போரை கண்டிக்கவும் செய்யாமல், ஆதரிக்கவும் செய்யாமல் மழுப்பலாக மேம்போக்காக இருப்பதாக அரசியல் நோக்கர்கள் விமர்சித்து வருகின்றனர். அதோடு மாநாட்டு அரங்கில் மழை நீர் தேங்கியது முதல் மாநாட்டு நிகழ்வுக்காக மறைக்கப்பட்ட ஏழைகளின் குடிசைகள், அமெரிக்க அதிபருடனான கூட்டு செய்தியாளர் சந்திப்பு தவிர்ப்பு வரை மோடி அரசு செய்த தந்திரங்கள் அனைத்தையும் ஊடகங்கள் அம்பலப்படுத்தி வருவதால், தெற்குலக நாடுகளின் பிரதிநிதி மோடி எனவும்; டெல்லி பிரகடனம் மகத்தான வெற்றி என்றும் ஆர்.எஸ்.எஸ் பாஜக பொய்ப் பரப்புரையை அதிதீவிரமாக முன்னெடுத்து வருகிறது.

**முதல் கோணல் முற்றும் கோணல்**

கடந்த ஓராண்டு காலத்திற்கும் மேலாக நடைபெற்று வருகிற உக்ரைன் போரானது, மேற்குலக நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான அரசியல் பொருளாதார உறவில் பெரும் இடைவெளியை ஏற்படுத்திவிட்டது. இந்த நேரத்தில் பிரதமர் மோடி நினைத்தால் ரஷ்யா உக்ரைன் போரையே நிறுத்தி விடுவார் என பாஜக பரப்புரை செய்த நிலையில், இந்தியாவில் நடைபெற்ற மாநாட்டை ரஷ்ய அதிபர் புடின் தவிர்த்தது இந்தியாவிற்கு பெரும் பின்னடைவாக அமைந்தது. புடினின் புறக்கணிப்பால் சீன அதிபர் ஷி ஜின்பிங்கும் ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்பதைத் தவிர்த்துவிட்டார். ஜி20 மாநாட்டில் பங்கேற்காமல் ஷி ஜின்பிங் தவிர்த்தது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் ஜி20 மாநாட்டில் உலகத் தலைவர்களின் ஒருமித்த கருத்துடன் கூட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றி மோடியின் சாதனையாக காட்ட வேண்டும் என்ற பாஜகவின் ஆசையில் ரஷ்ய, சீன தலைவர்களின் மாநாட்டுப் புறக்கணிப்பு மண் அள்ளிப் போட்டுவிட்டது.

குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போலே, ரஷ்யா, சீனா புறக்கணிப்பால் பிசிபிசுத்துப் போன மாநாட்டை ஒப்பேற்றும் விதமாக பிரகடனம் நிறைவேற்றி மாநாட்டை மோடி வெற்றி பெறவைத்துவிட்டார் என வேடிக்கையான பிரசாரத்தை பாஜக மேற்கொண்டு வருகிறது.

பெயர் மாற்றம் முதல் குடிசை மறைப்பு, மாநாட்டு அரங்கு ஊழல் வரை

சர்வதேச பொருளாதாரத்தில் சிறந்து விளங்கும் 20 நாடுகள் பங்கு பெறுகிற ஜி20 எனும் சர்வதேச கூட்டமைப்பில் தலைமை தாங்கி நடத்துகிற ஒரு நாடு திடீரென தனது பெயரை மாற்றினால் எப்படியிருக்கும்? மோடி அரசு அதையே சற்றும் பொருத்தமற்ற வகையில் தனது சனாதன அரசியலை சர்வதேச அரங்கில் சற்றும் வெட்கமின்றி எடுத்துச் சென்றது. முதலில் ஜி20 உச்சி மாநாட்டிற்கான அழைப்பிதழில் இந்தியாவின் பெயரை பாரத் என அச்சிட்டு பெரும் குழப்பத்தை ஏற்படுத்திய பாஜக அரசு, மாநாட்டு அரங்கில் பிரதமர் மோடியின் இருக்கைக்கு முன், இந்தியா என்பதற்குப் பதிலாக பாரத் என பொறிக்கப்பட்ட பெயர் பலகை வைத்து குழப்பத்தை ஏற்படுத்தியது.

எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற மனநிலையில் இருக்கிற பாஜக அரசு, மாநாட்டிற்காக மக்கள் வரிப்பணத்தை, முறையற்ற வகையில் வீணடித்தது. உலகத் தலைவர்கள் பார்வையில் இந்தியாவின் தலைநகரில் குடிசைகள் கண்ணில் படக் கூடாது என பெரும் துணிகளைக் கொண்டு குடிசைகளை மறைத்ததை பல வெளிநாட்டு பத்திரிக்கைகள் தலையங்கமாக எழுதின. டெல்லி விமான நிலையத்தில் தொடங்கி ஜி20 மாநாட்டு அரங்கிற்கு வருகிற வழி முழுவதும் சாலையோரம் உள்ள குடிசைப் பகுதிகளை பச்சை நிற திரைச் சீலைகளைக்



◆ ஜி20 மாநாடு நடைபெற்ற பாரத் மண்டபத்தில் மழை நீர் தேங்கி நின்ற அவலம்.

கொண்டும், பிரதமர் மோடியின் புன்னகை ததும்பும் உருவப்படம் தாங்கிய விளம்பரப் பதாகைகளைக் கொண்டும் “பாரத்” அரசு மூடியது. முன்னதாக அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் வருகையின் போதும் இங்கிலாந்து முன்னாள் பிரதமர் போரிஸ் ஜான்சன் குஜராத் மாநிலத்திற்கு வருகை தந்த போதும் இதே போன்று குடிசைப் பகுதிகளைத் திரைச் சீலைகளைக் கொண்டு மோடி அரசு மறைத்தது குறிப்பிடத்தக்கது. உலகப் பொருளாதாரத்தில் மூன்றாம் இடத்திற்கு இந்தியாவை அழைத்துச் செல்வதாக வாக்குறுதி கொடுக்கிற மோடி அரசு, நடைமுறையில் வறுமையை அப்புறப்படுத்தாமல், வறுமையில் உழல்பவர்களை அப்புறப்படுத்துகிறது. அவர்களின் குடிசைகளை இடிக்கிறது. சாலையோர வியாபாரிகளை அப்புறப்படுத்தினர். செப்டம்பர் மாதத்தில் மட்டும் ஆயிரம் தெருநாய்களை ஈவிரக்கமின்றி பிடித்தார்கள் என பிரான்சிலிருந்து வெளிவருகிற லே மொண்டே பத்திரிகை மோடியின் புகழை(!) எழுதுகிறது.

மிகவும் ஆர்ப்பாட்டமாக விளம்பரப்படுத்தப்பட்டு, மோடியின் சாதனையாக காட்டப்படும் மாநாட்டிற்கு சுமார் நான்காயிரம் கோடி ரூபாய் செலவு ஆனதாக மோடி அரசு கூறுகிறது. இந்த மாநாட்டிற்கு 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்த நிலையில், பத்து படங்கு அதிகமாக மாநாட்டிற்கு செலவு செய்து மக்கள் வரிப்பணத்தை விரயம் செய்து ஊழல் செய்ததாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டுகிறது. இவ்வளவு செலவு செய்தும் மாநாடு நடைபெறும் பாரத் மண்டப அரங்கில் மழை நீர் தேங்கியதை சுட்டிக்காட்டி “2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் செலவு செய்தும் ஜி20 மாநாட்டு அரங்கில் தேங்கி நிற்கும் மழைநீர்” என வீடியோ வெளியிட்டு காங்கிரஸ் குற்றம்சாட்டியது.

ரூ.2700 கோடியில் அமைக்கப்பட்ட ஜி20 மண்டபத்தில் வெள்ளம் தேங்குவதை விமர்சித்துள்ள தமிழ்நாடு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்பதை மறைக்க மொழி மதம் கலவரத்தின் பின் ஒளிந்து கொள்கிறது பாஜக என கடுமையாக சாடியுள்ளார்.



◆ ஜி20 தலைவர்களுடன் மோடி.



◆ மாநாட்டையொட்டி டெல்லியில் சுற்றித் திரிந்த 60 ஆயிரம் நாய்கள் பிடித்துச் சென்று சிறைவைப்பு.

# கேளுக்கு வெண்ணெய் ர்களுக்கு சுண்ணாம்பு

# வைத்தது மோடி அரசு

**கார்ப்பரேட்களுக்கு வெண்ணெய், சாமானியர்களுக்கு சுண்ணாம்பு**

ஜி20 கூட்டமைப்பு என்பது வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளுக்கு இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ள உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இந்தக் கூட்டமைப்பில் உறுப்பு நாடுகளாக அர்ஜெண்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், கொரியக் குடியரசு, மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை உள்ளன. இந்த அமைப்பின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் உச்சி மாநாடு நடைபெறுவது வழக்கம். இந்த கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் சுழற்சி முறையில் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாநாட்டிற்கும் ஒரு நாடு தலைமை வகிக்கும். இந்த ஆண்டு தலைமைப் பொறுப்புக்கு இந்தியாவுக்கு வந்துள்ளதால், உச்சி மாநாட்டிற்கு இந்தியா தலைமை தாங்கியது. இம்மாநாட்டிற்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஜெர்மனி பிரதமர் ஏஞ்செலா மெர்கல், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் முஹம்மது பின் சல்மான், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, வங்கதேச பிரதமர் சேக் ஹசீனா, ஐ.நா தலைவர் ஆண்டோனியோ குட்டரஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தமாநாடு,நாடுகளுக்குஇடையிலான புவிசார் அரசியலை விவாதிக்கிற களமாக அல்லாமல், பொருளாதார ஒத்துழைப்பை ஒருங்கினைக்கிற கூட்டமைப்பாக உள்ளதை கவனிக்க வேண்டும். ஆகவேதான் இம்மாநாட்டிற்கு அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி உலக வங்கியின் தலைவர் முதல் பன்னாட்டு நிதியத்தின்(ஐஎம்எப்) தலைவர்கள், தொழிலதிபர்கள் வரை பங்கேற்கின்றனர். ஒரு பக்கம் மாநாடு நடைபெற்றாலும், மறுபக்கம் பல்வேறு நாடுகளுடன் பொருளாதார ஒப்பந்தங்களும் விவாதிக்கப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன.

டெல்லியில் நடைபெற்ற இரு நாள் மாநாட்டிற்கு இடையே இந்தியாவுடன் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐரோப்பாவை இணைக்கும் மிகப் பெரிய ரயில் மற்றும் கப்பல் போக்குவரத்து திட்டத்தை இந்தியா, அமெரிக்கா, சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகள் தொடங்கவுள்ளதாக அமெரிக்க அதிகாரி கூறியது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் மூலமாக எரிசக்தி மற்றும் டிஜிட்டல் தகவல் தொடர்புகள் வளர்ச்சி பெருகும் என்று கூறப்படுகிறது. இந்தியாவில் இந்தத் துறைகளில் ஏகபோகமாக வளர்ந்து வளர்கிற அதானியும் அம்பானியுமே இத்திட்டங்களால் பலனடைவார்கள் என்பதே எதார்த்த உண்மை. இந்தத் திட்டமானது உலகின் 3 பிராந்தியங்களை இணைப்பதால் செழிப்பை ஏற்படுத்துவதாக தேன்தடவிக் கூறப்பட்டாலும் இத்திட்டங்கள் யாவுமே அதானி, அம்பானி போன்ற பெரும் கார்ப்பரேட்களுக்கு மட்டுமே செழிப்பை ஏற்படுத்தும். மாறாக சாமானிய உழைக்கும் மக்களின் வறுமையை போக்குவதற்கு எள்ளளவும் உதவப்போவதில்லை. "உலகில் 73 கோடி மக்கள் பசியுடன் உறங்கச் செல்லும் நிலை தொடரக்கூடாது. இதற்கு நாம் உச்சபட்ச கவனம் செலுத்தி தீர்வு காண வேண்டும்'' என பிரேசில் அதிபர் அதிபர் லுலா ட சில்வா இம்மாநாட்டில் கூறியது இங்கு கருதத்தக்கது.

``ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் என்பதுதான் ஜி 20ன் வாசகம். இருப்பினும், ஒரே மனிதன், ஒரே அரசு, ஒரே வணிகக் குழுமம் என்பதில்தான் மோடி நம்பிக்கை கொண்டிருப்பதாகத் தெரிகிறது. 2018ல் பியூனோஸ் அயர்ஸில் நடந்த ஜி20 உச்சி மாநாட்டில், தப்பியோடிய பொருளாதார குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், அவர்களின் சொத்துகளை முடக்கவும் ஒன்பது அம்ச கொள்கையை பிரதமர் மோடி முன்வைத்தார். ஆனால், நீரவ் மோடி, லலித் மோடி, மெகுல் சோக்சி, விஜய் மல்லையா போன்ற பொருளாதாரக் குற்றவாளிகளை பா.ஜ.க எளிதாக நாட்டை விட்டு வெளியேற அனுமதித்திருப்பதை பார்க்கும் போது, பிரதமரின் ஒன்பது அம்ச கொள்கை அஜண்டா நகைச்சுவையாக இருக்கிறது.'' என மோடி அரசின் கார்ப்பரேட் ஆதரவு கொள்கையை ஜெய்ராம் ரமேஷ் காட்டமாக விமர்சித்துள்ளார்.

மேலும் பிரதமர் தன், நெருங்கிய நண்பர்களான அதானிகளுக்கு சாதகமாக துறைமுகங்கள், விமான நிலையங்கள், மின்சாரம், சாலை என முக்கியமான துறைகளில் அவர்களின் ஏகபோகங்களை உருவாக்க வெறும் உதவி மட்டும் செய்யவில்லை. செபி, சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருவாய் புலனாய்வு இயக்குநரகம் போன்ற பல்வேறு அமைப்புகளில், அதானிகளுக்கு எதிரான முறைகேடு விசாரணையை திட்டமிட்டுத் தடுத்தும் இருக்கிறார் என தனது அறிக்கையில் மோடி அரசை அம்பலப்படுத்தி விமர்சிக்கிறார்.

கடந்த கால் நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் உலகமய தாராளமய தனியார்மய பொருளாதார கொள்கையால், குறிப்பிடத்தக்க வகையில் இந்திய முதலாளித்துவ வர்க்கம் பலனடைந்தன. அந்நிய ஏகபோக சக்திகளும் பலனடைந்தன. மோடியின் கடந்த ஒன்பது ஆண்டுகால ஆட்சியில் இந்திய கார்ப்பரேட் முதலாளித்துவ வர்க்கத்தினர் மென்மேலும் மூலதனத்தைக் குவிக்கிற ஏகபோக முதலாளிகளாக பரிணமிக்க தொடங்கி தங்களை பலப்படுத்திக் கொண்டனர். போர்ப்ஸ் பத்திரிக்கை அறிவித்துள்ள இந்தியாவின் மிகப்பெரிய பணக்காரர்கள் பட்டியலில் முகேஷ் அம்பானியும் கௌதம் அதானியும் ஒவ்வொரு ஆண்டிலும் தவறாமல் இடம் பெறுகிறார்கள்.

தற்போது நடந்து முடிந்துள்ள ஜி20 மாநாடு என்பது நாட்டின் பொருளாதாரத்தையும் விரல் விட்டு எண்ணக் கூடிய சில ஏகபோக கார்பரேட் வர்க்கத்தினர் சுரண்டுவதற்கும் வழி செய்கிற முயற்சியின் ஒரு பகுதியே. அதனால்தான் அதானியும் அம்பானியும் தங்களுக்கு இடையிலான போட்டிகளை கடந்து, பாஜகவின் இந்துத்துவ ஆட்சிக்கு, மோடி அரசுக்கு வெட்கமின்றி சாமரம் வீசுவதற்கு ஒன்றுபடுகிறார்கள்.






◆ ஜி20 மாநாட்டுக்காக டெல்லியில் உள்ள உழைக்கும் மக்களின் குடியிருப்புகளை பச்சைத் துணிகளைக் கொண்டு மூடிமறைப்பு

தொடர்புக்கு 9842391963

# குலக்கல்வி திட்டத்தை கொண்டுவர பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ் சூழ்ச்சி!

**இரா. முத்தரசன் சாடல்**

திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி தலைமையில் ஒன்றிய பிஜேபி அரசு கொண்டு வந்துள்ள விஸ்வகர்மா திட்டத்தை இரத்து செய்ய வலியுறுத்தி அனைத்து கட்சிகளின் சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் பங்கேற்று உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது.

விஸ்வகர்மா திட்டம் என்பது குலத்தொழில் பின்பற்றும் திட்டம் ஆகும். சாதியை பலப்படுத்தும் திட்டமாகும். சனாதனத்தை உறுதிப்படுத்தும் திட்டமாகும். இந்த திட்டத்தை முற்றிலுமாக ரத்து செய்ய வேண்டும்.

ராஜாஜி ஒரு நேர்மையானவர். குலக்கல்வி திட்டத்தை கொண்டு வருவதாக சொன்னார். அது கொண்டு வர முடியாத பட்சத்தில் தனது பதவியை ராஜினாமா செய்தார். ஆனால் மோடி அப்படியானவர் அல்ல, நேர்மையானவர்




அல்ல, அதனால் அவர் ஒருபோதும் இந்த திட்டம் செயல்படப்படவில்லை என்றாலும், ஒருபோதும் அவர் ஆட்சியை விட்டுப் போக மாட்டார். ராஜினாமாவும் செய்ய மாட்டார். ஏனென்றால் அவர் நேர்மையானவர் அல்ல...

சனாதனம் பற்றி திமுக அமைச்சர் உதயநிதிஸ்டாலின் சொன்ன கருத்து என்பது ஏற்கனவே பல மாதங்களுக்கு முன்பாக அவர் தெரிவித்த கருத்து தான். அப்போது அதை பெரிது படுத்தாமல் தற்போது அவர் பேசியதை வேண்டுமென்றே தற்கால அரசியல் பயன்படுத்தும் நோக்கத்தோடு ஆர். எஸ். எஸ். சும் பா. ஜ. க. வும் அதை பயன்படுத்துகிறது.

அண்ணாமலை துவங்கி அமித் ஷா வரை அதைப் பற்றி பேசுகிறார்கள். அவர் சொன்னதை நானும் வழிமொழிகிறேன். சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் அதற்கும் ஒரு படி மேலே போய் நான் சொல்லுகிறேன் ஆர்எஸ்எஸ் என்கிற அமைப்பு முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும், மண்ணிலே புதைக்கப்பட வேண்டும் என்று சொல்கிறேன். ஏனென்றால் தேர்தலில் தோல்வியுற்றாலும் ஆர்எஸ்எஸ் பாஜகவும் மீண்டும் இதே பிரிவினைவாத அரசியலை கையில் எடுத்து மக்களை பிளவுபடுத்துகிற வேலையை தொடர்ச்சியாக செய்யத்தான் போகிறது. அதனால் அவர்களின் சித்தாந்தத்தை முற்றிலுமாக ஒழிப்பது, ஆர். எஸ். எஸ். சித்தாந்தத்தை ஒழிப்பது என்பது இதற்கான நிரந்தர தீர்வாக அமையும். அதனால்தான் மீண்டும் சொல்கிறேன், அவர்கள் துடைத்தெறியப்பட வேண்டும். முற்றிலுமாக புதைக்கப்பட வேண்டும் என்று பேசினார்.

இந்த கூட்டத்தில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, திமுக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா, காங்கிரஸ் கட்சி தலைவர் கே.எஸ்.அழகிரி, விசிக தலைவர் தொல்.திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கே.பாலகிருஷ்ணன் மற்றும் தோழமை கட்சி தலைவர்கள் பங்கேற்று கண்டன உரை ஆற்றினார்கள்.

இந்த கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, தென் சென்னை மாவட்ட செயலாளர் எஸ்.கே.சிவா, மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி மற்றும் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

கலை இலக்கியப் பூங்கா

**அமெரிக்காவில் ஒரு உயர் மட்டக் கமிட்டி அமைத்து இந்த நவீன ஓவியர்களைக் கேள்வி கேட்டுத் துளைத்தனர். ஒரு ஓவியர் வரைந்த நங்கூரத்தை சுத்தியும் அரிவாளும் என்று குற்றம் சாட்டியது செனட் கமிட்டி.**

# கலை இலக்கியத் துறையில் ஊடுருவும் சி.ஐ.ஏ

1

**சில இலக்கியவாதிகளை சி. ஐ. ஏ. உளவாளி என்றும், சி. ஐ. ஏ. விடம் பணம் வாங்கிக் கொண்டு எழுதுகிறார் என்றும், சில கலை இலக்கிய இயக்கங்களையும் போக்குகளையும் சி. ஐ. ஏ பிரபலப் படுத்துகிறது என்ற குற்றச் சாட்டுகள் எல்லோருக்கும் தெரிந்ததுதான்.**



தமிழில் கூட க. நா. சு. போன்ற எழுத்தாளர்கள் இலக்கிய விமர்சகர்கள் மேல் இது போன்ற விமர்சனங்கள் வைக்கப்பட்டது உண்டு. க. நா. சு. போன்றவர்களும் பொங்கிப் பொங்கி இது அபாண்டம், அநியாயம் என்று இடதுசாரிகளைத் திட்டி எழுதுவது வழக்கம்தான்.

இதில் எது உண்மை? ஜார்ஜ் ஆர்வெல் போன்றவர்கள் பிரிட்டிஷ் உளவுத்துறைக்கு வேலை செய்தது ஆதாரபூர்வமாக முக்கால் நூற்றாண்டுக்கு முன்பே வெளியாகி விட்டது. இது ஆர்வெல் போன்ற தனிப்பட்ட ஒருவரின் செயலா? அல்லது ஒரு குறிப்பிட்ட கலை இலக்கிய இயக்கம் முழுவதுமே சி. ஐ. ஏ. வால் இயக்கப்பட்டதா? இது ஒரு அரசியல் போக்கா? சதியா? என்பது முழுமையாகத் தெரியாமலேயே இருந்தது.

ஒரு எழுத்தாளர் அல்லது ஓவியர் விரும்பி சி. ஐ. ஏ. வுக்கு வேலை செய்தாரா? அல்லது இலக்கியவாதிகள், கலைஞர்களைத் திரட்டி சி. ஐ. ஏ. கம்யூனிச எதிர்ப்பு இயக்கம் ஏதாவது நடத்தியதா? உண்மையிலேயே பணம் கொடுக்கப்பட்டதா? எப்படி கொடுக்கப்பட்டது? என்ன ஆதாரம்?

காலங்காலமாக ஆட்சியாளர்கள் கலைகளின் மீது செல்வாக்கு செலுத்த வெளிப்படையாக முயன்றே வந்துள்ளனர். சி ஐ ஏ வும் இதையே செய்தது என்றால் கலைஞர்களுக்குப் பண உதவி ஏன் ரகசியமாகச் செய்யப்பட்டது? யார் யார் பணம் வாங்கினார்கள்? பணம் கொடுத்தவர்கள் யார்? ஏன் ஒரு குறிப்பிட்ட வகையான ஓவியங்கள் abstract expressionism வகையைச் சேர்ந்தவை சிறப்பானவை என்று பிரச்சாரம் செய்யப்பட்டன? குறிப்பிட்ட வகையான நாவல்கள், எழுத்துக்கள் மட்டுமே இலக்கியத் தன்மை வாய்ந்தவை என்று பிரச்சாரம் செய்யப்பட்டது?

Hidden hands – A different history of modernism என்ற ஆவணப்படம் இந்தக் கேள்விகளுக்குத் திட்டவட்டமான பதில்களை அளிக்கிறது. புதிய வெளிச்சங்களைத் தருகிறது. சி ஐ ஏ இலக்கியத்தையும் ஓவியத்தையும் மற்ற கலைகளையும் கம்யூனிசத்துக்கு எதிரான போரில் ஆயுதங்களாகப் பயன்படுத்தியது. பல இலக்கியவாதிகளும் கலைஞர்களும் எந்த அளவுக்கு சி ஐ ஏ வுடன் பின்னிப் பிணைந்து இருந்தனர் என்பதை சந்தேகத்துக்கு இடமில்லாமல் நம்முன் வைக்கிறது.

அரை நூற்றாண்டுகால மர்மத்துக்கு விடை கண்டுபிடித்து விட்டது இந்தப் படம்.

மிகச் சிக்கலான மண்டையை பிய்த்துக் கொள்ள வைக்கும் கேள்விகளுக்கு பதில் மிக எளிமையானதாக இருந்து விடும். இந்த ஆவணப்படம் கூறும் பதில்களும் அப்படித்தான் இருக்கின்றன.

அக்கால உலக அரசியலையும், சி. ஐ. ஏ. அமைப்பின் செயல்பாடுகளையும் அணுஅணுவாக ஆராய்கிறது படம். ஒவ்வொரு மர்மமாக விலக்குகிறது. ஒவ்வொரு கேள்விக்கும் விடை காண்கிறது.

வெறும் ஊகங்களாக இல்லாமல் இந்த நடவடிக்கைகளை முன்னால் நின்று நடத்திய உளவுத்துறை அதிகாரிகளின் நேரடிப் பேட்டிகளுடன், ஆவணங்களுடன் விடைகளை முன்வைக்கிறது படம்.

ஆழமாக, அறிவு நுட்பத்துடன், அதே நேரம் ஒரு துப்பறியும் படத்தின் விறுவிறுப்புடன் சொல்கிறது படம்.

1952 ஆம் ஆண்டு.

பாரிஸ் நகரில் இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த கலைவடிவங்கள் (Masterpieces of the twentieth century) என்ற பெயரில் நடந்த ஒரு கண்காட்சியில் அமெரிக்காவில் abstract expressionism அல்லது avant garde வகைப்படுத்தப்பட்ட ஓவியங்களுக்குத் தனி அரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த பாணி ஓவியங்கள் நம்மிடையே பொதுவாக மாடர்ன் ஆர்ட் என்று அழைக்கப்படுபவை. மாடர்ன் ஆர்ட் வருவதற்கு முன்பு ஓவியம் என்பது ஒரு புகைப்படம் போல இருப்பதை அப்படியே காட்டுவதாக இருந்தது. இதற்கு மாறாக மாடர்ன் ஆர்ட் மனித முகங்கள், நிகழ்வுகள், உணர்வுகளைக் குறியீடுகளாகக் காட்டுகிறது என்று சொல்லப்பட்டது.

உதாரணமாக பழைய பாணி ஓவியங்களில் ஒரு ஜன்னல் என்பது ஜன்னல் மட்டுமே. இந்த நவீன ஓவியங்களில் அது விடுதலையைக் குறிக்கலாம். சிறையைக் குறிக்கலாம். வேறு பலவற்றையும் குறிக்கலாம்.

அதே போல ஜாக்சன் போலாக் போன்றவர்களின் ஓவியங்கள் தரையில் படுக்கப்போடப்பட்டுள்ள கேன்வாசில் பலவேறு வண்ணக் குழம்புகளின் தீற்றலாக இருக்கும். ஜேக்சன் போலாக் நடனம் போன்ற அசைவுகளுடன் படுவேகமாக வண்ணங்களை கேன்வாஸில் விசிறியடிப்பார். இதைப் பார்த்தால் ஒன்றும் புரியாது. புரிந்து கொள்ள எதுவும் இல்லை. இவை பொருளற்றவை இது வெறும் முட்டாள்தனம். பேத்தல் என்ற விமர்சனமும் உண்டு

முதல் பார்வைக்கு வெறும் வண்ணக் கலவை போலத் தெரிவது சிக்கலான மன உணர்வுகளைக் குறிப்பதாக இருக்கலாம். கனவைக் குறியீடாகச் சுட்டுவதாக இருக்கலாம் என்ற பார்வையும் உண்டு.

அது வேறு ஏரியா. நாம் அதற்குள் போக வேண்டாம்.

ஜாக்சன் போல்லாக் போன்ற புகழ் பெற்ற ஓவியர்களின் இந்த பாணி ஓவியங்கள் இந்த மாடர்ன் ஆர்ட் அரங்கில் இடம்பெற்றிருந்தன.

இந்தக் கண்காட்சி நடத்துவதற்கான பெரும் செலவை சி ஐ ஏ ஏற்றுக் கொண்டிருந்தது. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரும் இசையமைப்பாளரும் எழுத்தாளருமான நபக்கோவ் தனக்கு பாரிஸ் நகருக்கு பிசினெஸ் கிளாஸ் டிக்கெட் எடுத்துக் கொடுக்கப்பட்டதும் திகைப்படைந்தார். நபக்கோவ் போல்ஷிவிக் புரட்சியின் போது ரஷ்யாவை விட்டு வெளியேறிய பிரபு வம்சத்தைச் சேர்ந்தவர். தீவிரமான ஸ்டாலின் எதிர்ப்பாளர்.

ஆனால் இந்தப் நிதியுதவி மிகவும் ரகசியமாகச் செய்யப்பட்டது.

இரண்டு கேள்விகள் எழுகின்றன.

1. ஏன் அமெரிக்கா ரகசியமாக நிதியுதவி செய்ய வேண்டும்?

2. இந்த abstract expressionism எனப்படும் ஓவிய முறையை ஏன் கம்யூனிஸ எதிர்ப்புப் பிரச்சாரத்துக்கு சி. ஐ. ஏ. தேர்ந்தெடுத்தது?

### முதல் கேள்விக்கான பதில்

சோவியத் யூனியனின் புகழ்பெற்ற போல்ஷாய் தியேட்டர், நடனங்கள், கவிதைகள், நாவல்கள் ஐரோப்பா முழுவதும், உலகம் முழுவதும் புகழ் பெற்றிருந்தன,. உலகம் முழுவதும் இருந்த அறிவுஜீவிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் இடதுசாரி அரசியலின் பால் அனுதாபம் கொண்டவர்களாக இருந்தனர். 1949 ஆம் ஆண்டு நியூயார் நகரில் உலக அமைதி மாநாடு இடதுசாரி கலைஞர்களால் நடத்தப்பட்டு பெரும் வெற்றி பெற்றது.

நார்மன் மெய்லர், ஆர்தர் மில்லர், லிலியன் ஹெல்மன், ஆரோன் கப்லேண்ட் போன்ற புகழ் பெற்ற அமெரிக்க எழுத்தாளர்கள், கலைஞர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். சோவியத் யூனியன் உலக அமைதிக்காக நிற்கிறது. அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பாவும் உலகை ஆளும் வெறி கொண்டுள்ளன என்ற எண்ணம் இந்த நாடுகளிலிருந்த கலைஞர்களிடையே இருந்தது. கலைகளைப் பொறுத்தவரை அமெரிக்கா ஒரு பாலைவனம் என்ற சோவியத் பிரச்சார்ம் பெரும்பாலான மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதை எதிர் கொள்ள அமெரிக்க அரசு மேலே குறிப்பிட்ட நவீன வகை ஓவியங்களுக்கு உதவியது. ஒரு கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதலில் அரசு வெளிப்படையாகத்தான் ஆதரவு தெரிவித்து உதவிகள் செய்தது.

ஆனால் இந்த ஓவியங்கள் அமெரிக்காவில் கடுமையாக வெறுக்கப்பட்டன. இது ஓவியமே அல்ல, கலையே அல்ல என்று கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

இந்த ஓவியர்கள் முன்னாள் கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள், டிராட்ஸ்கியிஸ்டுகள். பல மக்கள் இயக்கங்களில் பங்கு கொண்டவர்கள். இதுவும் இந்த பாணி ஓவியங்களின் மேல் வலதுசாரிகளிடையே கடும் பகைமையை ஏற்படுத்தியது.

மாடர்ன் ஆர்ட்டுக்கு பின்னால் கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள் என்ற சந்தேகத்தை குடியரசுத் தலைவர் ட்ரூமன் முன்வைத்தார். இது ஆர்ட் என்றால் நான் ஹாட்டெண்டாட் இனத்தைச் சேர்ந்தவன் (Hottentot – ஒரு ஆப்பிரிக்க நாடோடி இனம்) என்றார் அவர்.

அமெரிக்காவில் ஒரு உயர்மட்டக் கமிட்டி அமைத்து இந்த நவீன ஓவியர்களைக் கேள்வி கேட்டுத் துளைத்தனர். ஒரு ஓவியர் வரைந்த நங்கூரத்தை சுத்தியும் அரிவாளும் என்று குற்றம் சாட்டியது செனட் கமிட்டி. மாடர்ன் ஓவியர்கள் தங்களையறியாமல் கம்யூனிஸ்டுகளால் மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள் என்று கூட கண்டுபிடிப்புகள் வைக்கப்பட்டன.

கம்யூனிஸ்ட் என்று குற்றம் சாட்டப்பட்ட எழுத்தாளர்களின் பட்டியல்களை லைஃப் போன்ற பெரிய பத்திரிக்கைகள் வெளியிட்டன. கம்யூனிசம், சோஷலிசம் என்ற பெயர்களுடன் ஏதாவது ஒருவிதத்தில் சம்பந்தப் பட்டிருந்த ஒவ்வொருவரும் பொது சமூகத்தாலும், அரசாலும் வேட்டையாடப்பட்டனர்.

அமெரிக்க அரசு ஆதரித்த நவீன ஓவியர்கள் இடதுசாரி அரசியலில் இருந்து எப்போதோ விலகிச் சென்றவர்கள் என்றாலும் இந்த முத்திரையின் காரணமாகவும், ஓவியங்கள் புரியாததாலும் இதில் ஏதோ சதி இருக்கிறது என்ற கருத்து பரவி ஏற்பட்ட கடும் எதிர்ப்பினால் அரசு ஏற்பாடு செய்திருந்த கண்காட்சி பாதியில் நிறுத்தப்பட்டது. இந்த ஓவியங்கள் மிக மிக அற்ப விலைக்கே ஏலம் விடப்பட்டன.

இந்த சூழலில் காரணமாக abstract expressionism, avant garde என்றெல்லாம் அழைக்கப்பட்ட நவீன பாணி ஓவியக் கண்காட்சிக்கு வெளிப்படையாக நிதியுதவி செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. எனவே சி. ஐ. ஏ. பின்னால் நின்று கொண்டு இந்த ஓவியக் கண்காட்சிகளை வழி நடத்தியது.

ரகசியமாக விமர்சகர்களைத் தூண்டி இந்த ஓவியங்கள் பற்றி நல்ல விமர்சனங்களை வெளியிட்டு தனக்கு ஆதரவான பெரும் பணக்காரர்களை இந்த ஓவியங்களை வாங்க வைத்து இவற்றுக்கு சந்தையை ஏற்படுத்தியது.

சி. ஐ. ஏ. என்றாலே ரகசியம்தான், மர்மம்தான் என்பதற்கு மாறாக ஒரு தேவையின் காரணமாகவே கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்தை ரகசியமாக நடத்த வேண்டிய தேவை அமெரிக்க அரசுக்கும், சி ஐ ஏவுக்கும் ஏற்பட்டது என்பதை அழகாக விளக்குகிறது படம்.

– இரா.முருகவேள்



# சங்கே முழங்கு!



## குரங்கு கையில் பூமாலை

**ரகுராம் ராஜன்**



ரிசர்வ் வங்கியின் முன்னாள் தலைவர் ரகுராம் ராஜன் எழுதுகிறார்..

இன்றைய இந்தியா ஒரு குரங்கு கையில் கிடைத்த பூமாலை என்று!

நான் என் நாட்டை நேசிக்கும் ஒரு சாதாரண குடிமகன் மட்டுமே!

நான் காங்கிரஸ்காரனோ, கம்யூனிஸ்டோ அல்லது மோடியின் பக்தனோ இல்லை.

கடந்த 70 ஆண்டுகளில் ஜாதி மத பேதமற்ற இந்தியாவாக மிகவும் முன்னேறியுள்ளது.

இவருக்கு முன்னாள் இந்தியாவை ஆண்டு வந்த அனைத்து பிரதமர்களும் மோடிஜியை விடவும் கல்வியாளர்களே! மேலும் தேசபக்தியாளர்களே!

அவர்கள் இரவு பகலாக உழைத்துள்ளனர். அதன் விளைவுதான் இன்று இந்தியா உலகில் வல்லரசு.

மோடிஜி பிறப்பதற்கு முன்பே, பாகிஸ்தானுக்கு எதிரான போரில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

மோடிஜி பேசத் தொடங்கும் முன்பே, உலகிலேயே சிறந்த அரசியல் சாசனம் இந்தியாவிடம் இருந்தது.

மோடிஜி தவழ்ந்து விளையாடும் போதே, இந்தியா பக்ராநங்கல் கால்வாயைக் கட்டியிருந்தது.



பள்ளிக்கூடத்தில் மோடிஜி புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கும் போதே இந்தியா அணு ஆராய்ச்சி மையத்தைத் திறந்து வைத்துவிட்டது.

மோடிஜி விளக்கு ஏற்றுவது எப்படி என்று கற்றுக்கொண்டிருந்த போதே தாராபூர் அணுமின் நிலையத்தை இந்தியா ஆரம்பித்திருந்தது.

மோடிஜி ஆடை உடுக்கும் முன்பே. இந்தியாவில் துணி நெசவு செய்யத் தொடங்கி விட்டனர்.

AIIMS, IIT & IIM மற்றும் பல பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் தொடங்கப்பட்டிருந்தன.

ராஜ்தானி எக்ஸ்பிரஸ் போன்ற ரயில்கள் வேகமாக ஓடும் போது மோடிஜி டீ விற்றுக் கொண்டிருந்தார்.

இத்தனை நன்மைகளும் முன்பே நிகழ்ந்திருந்தது!

நம்முள் இன்னும் சிலர் நம்புகிறார்கள் அல்லது நம்ப வைக்கப் படுகிறார்கள் எல்லாம் மோடிஜியின் ஆளுமையால் நடந்தேறியது போல!

உண்மையில் மோடிஜி இந்தியாவை எட்டு ஆண்டுகளில்; நாற்பது ஆண்டுகள் பின்னோக்கி அழைத்துச் சென்று விட்டார். ஏழ்மையும் வறுமையும் எல்லையின்றி போகிறது.

ஜாதியற்ற, மதநல்லிணக்க இந்தியாவை உருவாக்க கைகோர்த்து நின்றவர்களின் வரிசையில், அதற்கு எதிரான சித்தாந்தத்தை கொண்டராகவே உள்ளார் மோடிஜி.

வரும்கால இந்தியாவின் நம் குழந்தைகள் ஒருவருக்கொருவர் சண்டையிடாமல் நல்லுறவோடு வாழ்ந்து வளமான பொருளாதார சமத்துவமிக்க நாடாக அமையட்டும்.

# கலை இலக்கிய அரங்கம்

### புதுமைப்பித்தன் பெயரில் சிற்றரங்கம் தொடக்க விழா!

தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை சார்பில் சென்னை அண்ணா சாலை தேவநேயப் பாவாணர் நூலகத்தில் புதுமைப்பித்தன் பெயரில் சிற்றரங்கம் தொடக்க விழா நடைபெற்றது.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் முந்தைய ஆட்சியில் மூடப்பட்ட தேவநேயப் பாவாணர் பொது நூலக அலுவலகத்தில் உள்ள, கூட்ட அரங்குகள் மீண்டும் திறக்க வேண்டும் என்று பல முறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைத்துள்ளோம். இன்றைய ஆட்சியில் நம் கோரிக்கை நிறைவேறியுள்ளது. அதற்கு நமது நன்றியையும், பாராட்டையும் தெரிவிக்கும் வகையில் அரங்கை திறந்து வைத்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் பொய்யாமொழி அவர்களுக்கும், எழுத்தாளர் மனுஷ்யப் புத்திரன் அவர்களுக்கும் மரியாதை செய்யப்பட்டது.



இதில் கணபதி இளங்கோ, டிஸ்கவரி வேடியப்பன், முனைவர் ஜாபர் சாதிக், முனைவர் சலீம் புதுக்கல்லூரி பேராசிரியர்கள், முனைவர் கோ. உத்திராடம் செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனம் முதலிய தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றத் தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

### தினமலருக்கு கண்டனம்

தமிழ்நாடு அரசு சமீபத்தில் அமல்படுத்தியுள்ள அனைத்துத் துவக்கப்பள்ளி மாணவர்களுக்குமான காலை உணவுத்திட்டம் குறித்து தினமலர் நாளிதழ் "காலை உணவு திட்டம், மாணவர்களுக்கு டபுள் சாப்பாடு, ஸ்கூல் கக்கூஸ் நிரம்பி வழிகிறது" என்று தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது. வக்கிரப் புத்தியும், அநாகரிகமும் கலந்த தினமலரின் தலைப்புச் செய்தி தமிழ் கூறும் நல்லுலகத்தையே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

2022ல் காலை உணவையும் வழங்கும் முன்னோடி திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் தமிழகத்தில் முதலில் ஒரு பகுதிக்கும், தற்போது அனைத்துத் துவக்கப்பள்ளி மாணவர்களுக்கும் அமல்படுத்தியுள்ளார். இது பள்ளிக்கல்வி பயிலும் மாணவர்கள் பசியின்றி கல்வி பயில வழிவகுக்கும் ஒரு சிறப்பான திட்டம் ஆகும். தினமலரின் தலைப்புச் செய்தி. இந்த இழிசெயல் கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் நடந்துள்ள ஓர் அடாவடித்தனமான செயலாகும்.

தினமலர் நாளிதழ் தமிழ்நாட்டு மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

### நூல் அறிமுக விழா

சென்னை ஒய்.எம்.சி.ஏ பட்டிமன்றம் மற்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை மாவட்டம் இணைந்து நடத்தும் நூல் அறிமுக விழா ஒய். எம்.சி.ஏ. அரங்கில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஜபல்பூரில் நடைபெற்ற AIPWA மாநாட்டில் தேசியச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட டி.எஸ். நடராஜன் அவர்களுக்கு, பேரா ப. தாமரைக் கண்ணன் தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் ஒய் எம் சி ஏ பட்டிமன்ற பொதுச் செயலாளர் மரியாதை செய்தார்.

தகஇபெ மாநில துணைச் செயலாளர் சசிகலா தளபதி விஜயராஜா அவர்கள் எழுதிய அரவு, வல்லமை தாராயோ ஆகிய இரு நூல்கள் குறித்து முறையே எஸ். சங்கரநாராயணன், கணபதி இளங்கோ ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்ச்சிக்கு பட்டிமன்ற பொதுச் செயலாளர் பேரா ப. தாமரைக்கண்ணன் வரவேற்புரை ஆற்றினார். டி.எஸ். நடராஜன் தலைமையுரை ஆற்றினார். நாவலாசிரியர் சசிகலா தளபதி விஜயராஜா அவர்கள் ஏற்புரை வழங்கினார். இறுதியில் புலவர் பு.சீ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நன்றி கூறினார்.

### முனைவர் பி.கணேசன் படத்திறப்பு, நூல் வெளியீடு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை மாவட்டம், திருவொற்றியூர் மற்றும் மணலி கிளைகள் சார்பில் திருவொற்றியூர் தேரடியில் முனைவர் பி. கணேசன் நினைவேந்தல் படத்திறப்பு நூல் வெளியீட்டு நிகழ்ச்சி நடந்தது.

வரவேற்புரை மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பினை முனைவர் ஆ. அருள்மணி மேற்கொண்டார். முனைவர் முத்துராஜ் கிரேட் லாக்ஸ் மேலாண்மை கல்லூரி அவர்கள் படத்தை திறந்து அஞ்சலி உரை நிகழ்த்தினார். புகழஞ்சலி நிகழ்ச்சிக்கு கவிஞர் இரவீந்திரபாரதி மேனாள் பொதுச் செயலாளர் த. க. இ. பெ. தலைமை உரை நிகழ்த்தினார். முனைவர் கணேசன் ஆய்வுக் களஞ்சியம் நூலினை AIPWA தேசியச் செயலாளர் டி.எஸ். நடராஜன் வெளியிட இசைக்கும்மணி, மாநிலக் குழு உறுப்பினர் யா. அருள் எழுத்தாளர் மற்றும் குழந்தைகள் மோகுல்ஸ்ரீ பிரசாத், ஜெய் ஸ்ரீ கீர்த்தனி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

முனைவர் கார்த்திகேயன் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம், முனைவர் கணபதி இளங்கோ, முனைவர் எம். நாகராஜன் செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனம் ஆகியோர் புகழஞ்சலி ஆற்றினர்.

முனைவர் கணேசன் ஆய்வுக் களஞ்சியம் நூல் குறித்து, முனைவர் யாழினி முனுசாமி மதிப்புரை வழங்கினார். ஆசிரியர் எம். செல்வராஜ் நன்றியுரை கூறினார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை மாவட்டம் திருவொற்றியூர் கிளை புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப் பட்டனர்.

கிளை தலைவர் கோவிந்த ராஜுலு, கிளை செயலாளர் முனைவர் செல்வமீனா, பொருளாளர் முனைவர் ஆ. அருள்மணி, து. தலைவர் இயக்குநர் கண்ணன், துணைச் செயலாளர் திருப்பதி, மதிப்புறு தலைவர் இசைக்கும் மணி ஆகியோர் ஒரு மனதாக தேர்வு செய்யப் பட்டனர்.

# அரசியலமைப்புச் சட்டத்தையும், நாடாளுமன்றத்தையும் பாதுகாப்பீர்!

**குடியரசுத் தலைவருக்கு சிபிஐ தேசிய செயலாளர் பினாய் விஸ்வம் எம்.பி. வேண்டுகோள்**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு செயலாளரும், நாடாளுமன்றக் குழு தலைவருமான பினாய் விஸ்வம் எம்பி, இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், தனது ஆழ்ந்த கவலைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

சிறப்புக் கூட்டத் தொடருக்கான அழைப்பிலிருந்து, பொதுவாக நாடாளுமன்றத்தில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் அதன் சட்டமியற்றும் எந்த அலுவல்களும் இச்சிறப்புக் கூட்டத்தில் இராது என்பது அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் பூஜ்ய நேரம், கேள்வி நேரம் அல்லது தனிநபர் மசோதா தாக்கல் தினம் என எதுவும் இராது எனவும், மற்றும் இந்த ஐந்து தினங்களும் எந்த நிகழ்ச்சி நிரலும் சுற்றறிக்கையில் இல்லை என அறிகிறோம்.

நமது அரசாட்சி முறையில் நாடாளுமன்றத்தின் செயல்பாடு என்பது அரசை மக்களுக்குப் பதிலளிக்கப் பொறுப்புள்ளதாக்குவதாகும். ஆனால் வாக்குவாதங்கள், விவாதங்கள் மற்றும் மாற்று கருத்துகளை முன் வைத்து நடைபெறும் அவையை இந்த அமர்வு, ஒருநிர்வாக நாடாளுமன்றமாக (எக்ஸிக்யூடிவ் பார்லிமெண்ட்) மாற்றி அமைத்து விடுமோ என தற்போதைய நடவடிக்கைகள் ஒருவரை வியப்படையவே வைக்கும்.

முந்தைய கூட்டத்தொடர்களில் நாம் கண்டதுபோல, மணிப்பூர் உள்ளிட்ட மிகக் கூடுதல் முக்கியத்துவமுடைய பிரச்சனைகளை விவாதிப்பதிலிருந்து உறுப்பினர்களின் குரல் வளையை அரசு நெறித்ததையும், நீண்ட கால பின்விளைவுகளை ஏற்படுத்தும் பல சட்டங்களை அவசர அவசரமாக விவாதமின்றி நிறைவேற்றியதையும் பார்த்தோம். நாடாளுமன்றத்தை வழக்கொழிந்ததாகவும் திறனற்றதாகவும் ஆக்கும் இந்த முயற்சிகளின் பின்னணியில், இந்தச் சிறப்பு அமர்வையும் அரசின் நாடாளுமன்ற பெரும்பான்மையால் நாடாளுமன்ற முறைமையை ஒழித்துக் கட்டிவிடும் தெளிவான செய்தியை வழங்கவே அரசு கருதி உள்ளது போலத் தோன்றுகிறது.

நமது அரசியலமைப்புச் சட்டத்தில் கனவுக் கண்ணோட்டத்துடன் பொறிக்கப்பட்ட ஆட்சி முறைமையின் சமச்சீர் தன்மையைப் பாதுகாக்க அதிகாரக் கட்டுப்பாடுகளுக்கான ஏற்பாடுகள் தற்போது பெரும் அச்சுறுத்தலில் இருப்பது தெளிவாகியுள்ளது. தாங்கள், "அரசியலமைப்புச் சட்டத்தைப் பராமரித்துப் பாதுகாக்கவும், தாக்குதலிருந்து காக்கவும், அதனைப் பற்றியிருந்து பாதுகாக்கவும்" (to "preserve, protect and defend the Constitution") உறுதி கூறி பதவிப் பிரமாணம் ஏற்றீர்கள். இந்த அசாதாரணமான சூழ்நிலையில், நாடாளுமன்ற முறைமையைப் பாதுகாக்க உங்களின் தலையீட்டை நான் வேண்டுகிறேன்.

மேலும் நாடாளுமன்ற கூட்டத் தொடர்களைக் கேள்விகள் கேட்கும் மேடையாகவும், முக்கியப் பிரச்சனைகளை எழுப்பி அவற்றின் மீது விவாதங்களை நடத்தும் மன்றங்களாகவும் தொடர அனுமதிக்க வேண்டும் எனவும் நான் தங்களை வேண்டுகிறேன்."

# தினமலரைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

பள்ளிக் குழந்தைகள் உண்ணும் காலை உணவுத் திட்டத்தின் மீது வன்மமும், காழ்ப்பும் நிறைந்த இழிந்த செய்தி வெளியிட்ட தினமலர் நாளிதழைக் கண்டித்து, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மற்றும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் இணைந்து திண்டுக்கல் மணிக்கூண்டு அருகில் கவிஞர் ச.சிவக்குமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இவ்வார்ப்பாட்டத்தில் தகஇபெ மாவட்டச் செயலாளர் சு.பிரபாகரன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மாவட்டச் செயலாளர் இரா.வினோத்குமார், சிபிஐ மாநகரச் செயலாளர் கே.ராஜாங்கம், திராவிடர் கழகம் மாவட்டத் தலைவர் இரா.வீரபாண்டியன் , தந்தை பெரியார் திராவிடர் கழகம் பிரச்சாரச் செயலாளர் துரை.சம்பத், திருமா பயிலகம் ஒருங்கிணைப்பாளர் எஸ்.ரோக்கஸ்வளவன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, பி.பொன்னுச்சாமி, தகஇபெ, தவநூதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

இறுதியாக, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் த.அறம் சிறப்புரை நிகழ்த்தினார்.

வேலைப் பளுவைக் கண்டித்து

# அரியலூர் ஏஐடியுசி துப்புரவு தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்




அரியலூர் நகராட்சியில் பொது சுகாதார பணி செய்யும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கலெக்டர் அறிவித்த தினக்கூலி ஊதிய 31 மாதத்திற்கான அரியர்ஸ் பணம், நிரந்தர தொழிலாளர்களுக்கு 14 வருடமாக இ.பி.எப் மற்றும் சி.பி.எஸ் வட்டியுடன் கூடிய இருப்புக் கணக்கு கொடுப்பது, என்.எம்.ஆர் பணி சர்வீஸ் காலத்தை நிரந்தர பணி சர்வீஸ் காலத்தில் சேர்த்து வரன்முறை படுத்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அரியலூர் நகராட்சி புதிய அலுவலகம் முன்பு, ஏஐடியுசி சங்க செயலாளர் ரெ.நல்லசாமி, தலைமையில் கு.சிவஞானம், செ.மாரியப்பன், ம. கோபி, மு அமிர்தவள்ளி,ம. குருசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், உள்ளாட்சித் துறை மாநில செயலாளர் த. தண்டபாணி சிறப்புரையாற்றினார். திருமானூர் ஜி. ஆறுமுகம், ஜீவா, வால்பாறை மாணிக்கம், அரியலூர் ஒன்றியம் சிபிஐ செயலாளர் டி. ராயதுரை, நொச்சிகுளம் பழனிசாமி, உட்பட 100க்கும் மேற்பட்ட நிரந்தர மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் நகராட்சி நிர்வாகத்திடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

# குளத்தில் மண் அள்ளுவதை கண்டித்து ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டம் சிவகிரியில் பொதுமக்களின் குடிநீருக்கு ஆதாரமாக விளங்க கூடிய சின்னாவுடைப்பேரி குளத்தில் மண் அள்ளுவதை கண்டித்து நகரச் செயலாளர் பி. பாலசுப்பிரமணியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் டி. இசக்கித்துரை, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சமுத்திரக்கனி, கூட்டுறவு பண்டக சாலை தலைவர் வி. ராஜேந்திரன், கூட்டுறவு பண்டகசாலை துணைத்தலைவர் ஜோதி ராமலிங்கம், மாவட்ட குழு உறுப்பினர் க.கண்ணன் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

## வினாடி - வினா விடைகள்

1. கேரள மாநிலம் காலடியில் ஏழாம் நூற்றாண்டில் பிறந்தார்.
2. அத்வைதம்
3. ஹெகல்
4. 1956 அக்டோபர் 14
5. டெல்லி
6. விக்ரம் சாராபாய்

# அனைத்திந்திய முற்போக்குப் பேரவை தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம்



அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின், விரிவடைந்த மாநிலக் குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநில தலைவர் டாக்டர் என்.வெங்கடேஷ் தலைமை தாங்கினார்.

பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் வேலை அறிக்கை மற்றும் இன்றைய சமூகப் பொருளாதார அரசியல் வளர்ச்சிப் போக்குகள் குறித்த அறிக்கையை முன்வைத்தார்.

கூட்டத்தில் அகில இந்திய நிர்வாகக் குழு உறுப்பினர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில், எழுத்தாளர் கொற்றவை அவர்களின் தேர்வு மற்றும் தொகுப்பில் உருவான, சாதியப் பிரச்சினையும் மார்க்சியமும் தொடரும் விவாதம் மற்றும் குழந்தைகளுக்கான பொருளாதாரம் என்ற நூல்கள் அறிமுகமும் செய்யப்பட்டன. இந்நூல்கள் குறித்து எழுத்தாளர் கொற்றவை விளக்கவுரையாற்றினார்.

இக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒரே தேசம் ஒரே தேர்தல் என்ற திட்டத்தை கொண்டுவர ஒன்றிய அரசு முயற்சிப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. இத்திட்டம், இந்தியா போன்ற பன்முகத்தன்மையும், பல்வேறு அரசியல் கட்சிகளும், மாநில கட்சிகளும், பல்வேறு மொழிவழி மாநிலங்களும் உள்ள நாட்டில் பல்வேறு நடைமுறை சிக்கல்களை உருவாக்கும். நாட்டை சர்வாதிகாரப் பாதைக்கு இட்டுச் செல்லும். எனவே இத்தகைய முயற்சியை கைவிட வேண்டும்.

நாடு முழுவதும் மதரீதியான பிரச்சினைகளை உருவாக்க சங் பரிவார அமைப்புகளும்,ஒன்றிய அமைச்சர்களும் முயல்வது கடும் கண்டனத்திற்குரியது.

மணிப்பூரில் அமைதி திரும்பிட ஒன்றிய அரசும், மணிப்பூர் மாநில அரசும் ஆக்கப்பூர்மான தீர்வை காண முயல வேண்டும்.

தமிழ்நாடு அரசு, தனது மருத்துவமனைகளில், அனைத்து மருத்துவப் பரிசோதனைகளையும், சிகிச்சைகளையும் முற்றிலும் இலவசமாக்கிட வேண்டும்.

இன்றைய கூட்டத்தில் பல்மருத்துவ பயிற்சி மருத்துவர்கள் ஸ்ரீநாத்,காளிதாசன், கலைச்செல்வன், விஜயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஏழைகள் அதிகம் வாழும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சிறப்பு திட்டங்களை அறிவித்திடுக!

## மாதர் சம்மேளன மாவட்ட மாநாடு வலியுறுத்தல்






இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் புதுக்கோட்டை மாவட்ட 15வது மாநாடு புதுக்கோட்டையில் நடைபெற்றது.

முன்னதாக பழைய பேருந்து நிலையத்திலிருந்து அண்ணா சிலை வழியாக கே. எம். மஹால் வரை மாவட்ட செயலாளர் ஆர். இந்திராணி தலைமையில் பேரணி நடைபெற்றது. பேரணியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் த. செங்கோடன் தொடங்கி வைத்தார்.

மாநாட்டில் மா. ஜெயா, கே.கோமதி, ஆர். தனலட்சுமி ஆகியோர் தலைமை குழுவாக வழி நடத்தினார்கள்.

மாவட்ட தலைவர் எஸ். சுப்புலட்சுமி கொடியினை ஏற்றி வைத்து வரவேற்புரையாற்றினார். மாநாட்டை தொடங்கி வைத்து சங்கத்தின் மாநில துணைச் செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழு உறுப்பினருமான மு .கண்ணகி உரையாற்றினார்.

மாநில துணைச் செயலாளர் நிஷா சத்தியன் வாழ்த்துரை வழங்கினார்.

மாநில செயலாளர் ஜி.மஞ்சுளா சிறப்புரையாற்றினார். சிபிஐ மாவட்ட செயலாளர் த. செங்கோடன், என். ஆர். ஜீவானந்தம், ப.ஜீவானந்த, பவி தாரணி, எ. ரங்கராஜ், கே. முத்துலட்சுமி, பி. சுசீலா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சட்டமன்ற நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டை நிறைவேற்றிட வேண்டும்.

ஏழைகள் அதிகம் வாழும் மாவட்டமாக புதுக்கோட்டை மாவட்டத்தை நிதி ஆயோக் அறிவித்துள்ளது. எனவே ஒன்றிய அரசும், மாநில அரசும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு என சிறப்பு திட்டங்களை அறிவித்து செயல்படுத்திட வேண்டும் என்ற தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

***சீர்காழி:*** சீர்காழியில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டிதர மாதர் சம்மேளன மாநாடு வலியுறுத்தல்

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மயிலாடுதுறை மாவட்ட 15வது மாநாடு தேவகி தலைமையில் நடைபெற்றது. வித்யாதேவி சுரேஷ் வரவேற்று பேசினார். மாநில தலைவர் பத்மாவதி மாநாட்டு கொடியினை ஏற்றிவைத்து மாநாட்டை வாழ்த்தி பேசினார். மயிலாடுதுறை நகரத்தில் ஊர்வலமாக சென்று மாவட்ட செயலாளர் ஸ்ரீ பாலா, மாவட்ட தலைவர் வித்யாதேவி சுரேஷ், பொருளாளர் தேவகி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல், காய்கறிகள் மளிகை பொருட்கள் உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்திட வேண்டும்.

சட்ட மன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் 33 சதவீத இட ஒதுக்கீடு சட்டத்தை நடப்பு நாடாளுமன்ற கூட்டத் தொடரில் இயற்றவேண்டும்.

சீர்காழி பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் புதிய தாசில்தார் அலுவலகம் அமைத்து தருமாறு தமிழக அரசை மாநாடு கேட்டுக்கொள்கிறது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

***வாசுதேவநல்லூர்:*** இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தென்காசி மாவட்டம் வாசு ஒன்றிய பேரவைக்கூட்டம் எம்.பூமாரி தலைமையில் புளியங்குடியில் நடைபெற்றது, தலைவராக எஸ்.பாக்கியம் எம்.சி., செயலாளராக டி.பூர்ணியம்மாள் மற்றும் பொருளாளராக ஜெ. மணிகண்ட ஈஸ்வரி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

***திருப்பனந்தாள்:*** இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் திருப்பனந்தாள் ஒன்றிய மாநாடு மகாராஜபுரம் ஊராட்சியில் நடைபெற்றது. மாநில பொதுக்குழு உறுப்பினர் க.கண்ணகி பங்கேற்று உரையாற்றினார்.

சங்கத்தின் பணிகள் மற்றும் உறுப்பினர் பதிவு இயக்கம் குறித்து ஒன்றிய தலைவர் பானுமதி உரையாற்றினார். கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் நிக்கல்ஸ்ரீ, மாவட்ட நிர்வாகிகள் எம்.ராஜலஷ்மி, பா.சரண்யா, டி.செந்தாமரை, எம்.வரலட்சுமி, உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் டி .ஆர்.குமரப்பா, விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் க.சுந்தர்ராஜன் உள்ளிட்டோர் வாழ்த்து பேசினர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

பாராளுமன்றத்தில் பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டை வழங்குவதற்கான மசோதாவை மக்களவையில் உடனடியாக தாக்கல் செய்து சட்டமாக்க வேண்டும்.

வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு மாதம் ஒரு சிலிண்டர் முழு மானியத்தில் வழங்கிட வேண்டும்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சாவூர் மாவட்ட மூத்த தலைவர்
# தஞ்சை ஜி.கிருஷ்ணன் மறைவுக்கு இரங்கல்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சாவூர் மாவட்ட மூத்த தலைவர் தஞ்சை ஜி.கிருஷ்ணன் மறைவுக்கு இரங்கல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினரும், ஒன்றுபட்ட தஞ்சாவூர் மாவட்ட முன்னணித் தலைவர்களில் ஒருவருமான தோழர் ஜி. கிருஷ்ணன் (81) தஞ்சாவூர் மாவட்ட கட்சி அலுவலகத்தில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழர்.ஜி.கிருஷ்ணன் திருநெல்வேலி மாவட்டம், ரங்கசமுத்திரம் என்ற ஊரை பூர்வீகமாக கொண்டவர். ஆன்மீக நம்பிக்கையும், பழைமை பிடிப்பும் கொண்ட குடும்பத்தில் கணபதி நாராயணியம்மாள் தம்பதிகளுக்கு இரண்டு சகோதரர்கள், நான்கு சகோதரிகளுடன் பிறந்தவர் தோழர்.ஜி.கிருஷ்ணன். இளங்கலை (பொருளாதாரம்) பட்டப் படிப்பு முடித்ததும் கால்நடைத்துறையில் தட்டச்சர் மற்றும் உதவியாளராக அரசுப் பணியில் சேர்ந்தவர்.

பழைய வட ஆற்காடு மாவட்டத்தில், அரசுப் பணியில் இருந்து தஞ்சாவூருக்கு பணி மாறுதல் செய்யப்பட்டார். அவர் தஞ்சாவூர் வந்த பிறகும், தஞ்சாவூரில் பணியில் இருந்தவருக்கு விடுவிப்பு உத்தரவு கிடைக்காதால் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காக தஞ்சாவூர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அப்போதைய மாவட்டச் செயலாளர் மா.காத்தமுத்து அவர்களை அணுகி, கட்சி அலுவலகத்தில் தங்கினார்.

கட்சி அலுவலகத்தில் தங்கிய தோழர் ஜி.கிருஷ்ணன், கட்சி அலுவல் தொடர்பான ஆவணங்களை தட்டச்சு செய்யத் தொடங்கி, தோழமை நிறைந்த உறவுகளால் ஈர்க்கப்பட்டு அரசுப் பணியை துறந்து கட்சியின் முழுநேர ஊழியரானார். அப்போது தொடங்கிய கட்சி வாழ்க்கையை அவரது இறுதி மூச்சு வரை மேற்கொண்டுள்ளார். அவரது கட்சி வாழ்க்கை முறை முன்னுதாரணமாக அமைந்துள்ளது. அவர் தேர்ந்தெடுத்த பாதையில் சலனமோ, தயக்கமோ இல்லாமல் மிகுந்த நம்பிக்கையோடு பயணித்தவர்.

தோழர்.கிருஷ்ணன் கட்சியின் தஞ்சாவூர் நகரச் செயலாளர், மாவட்ட நிர்வாகக் குழு மற்றும் செயற்குழு உறுப்பினர், மாநிலக் குழு உறுப்பினர் மற்றும் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் என பல நிலைகளில் பொறுப்பேற்று சிறப்பாக செயல்பட்டவர்.

தஞ்சாவூர் மாவட்ட ஏஐடியூசி தொழிற்சங்க பொதுச் செயலாளர், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் என பல்வேறு அரங்கப் பணிகளில் முத்திரை பதித்த பணிகளில் ஈடுபட்டவர்.

கறந்தை தமிழ்ச் சங்கம் உள்ளிட்ட இலக்கிய அமைப்புகளுடனும், வாசகர் வட்டங்களுடனும் நெருங்கிய தொடர்பில் இருந்து பல்வேறு கருத்தோட்டம் கொண்டவர்களோடும் இணக்கமான நட்பு கொண்டு இருந்தவர்.

கடந்த 1968 ஆம் ஆண்டு கீழ் வெண்மணியில் பட்டியல் சாதிப் பிரிவை விவசாயத் தொழிலாளர்கள் 44 பேர், சாதிவெறி ஆதிக்க சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட கொடூர சம்பவத்தை தொடர்ந்து தமிழ்நாடு கணபதியா பிள்ளை ஆணையம் அமைத்தது.

விவசாயத் தொழிலாளர் ஊதிய நிலை குறித்து ஆய்வு செய்த கணபதியா பிள்ளை விசாரணை ஆணையத்துக்கு மா.காத்தமுத்து, ஏ.எம்.கோபு, டி.ஆறுமுகம் உள்ளிட்ட தலைவர்கள் அறிக்கை தயாரித்த போது ஜி. கிருஷ்ணன் பெரும் பங்களிப்பு செய்துள்ளார். எழுத்து வன்மையும், பேச்சு திறனும் கொண்ட ஜி. கிருஷ்ணன், திருமணம் செய்து கொண்டு, இல்லற வாழ்க்கை ஏற்கவில்லை. அவர் விவசாயத் தொழிலாளர்கள் குடும்பங்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்து வந்தார். அவர் மீது ஆயிரக்கணக்கான மக்கள் மாறாத பாசம் கொண்டு "ஜிகே" என அன்போடு அழைத்து வந்தனர்.

அர்த்தம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து காட்டிய தோழர் ஜி.கிருஷ்ணன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது என தனது அறிக்கையில் மாநிலச் செயலாளர் கூறியுள்ளார்.

# தேசிய கண்தான இரு வாரம் விழா விழிப்புணர்வு மனித சங்கிலி

தேசிய கண்தான இரு வார விழாவை ஒட்டி, வடகோவை மேட்டுப்பாளையம் சாலை, ஆர்.எஸ். புறத்திலிருந்து செயல்படும் "டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை" மற்றும் பிபி.ஜி. கண் மருத்துவக் கல்லூரி இணைந்து கண்தான விழிப்புணர்வு மனித சங்கிலி இயக்கம் நடத்தினர். கோவை மாநகர காவல் துறை துணை ஆணையர் ஜி.சந்திஸ் ஐ.பி.எஸ். அவர்கள் துவக்கி வைத்தார். டாக்டர் அகர்வால் மருத்துவமனை மருத்துவ இயக்குனர் டாக்டர் ஜெயஸ்ரீ, கண் மருத்துவர்கள், ஊழியர்கள் மற்றும் பி.பி.ஜி. கண் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இந்த மனித சங்கிலி இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

கண்தான விழிப்புணர்வு குறித்து பேசிய காவல்துறை துணை ஆணையர் சந்திஸ் பேசும்போது, "கண் தானம் மிக மிக முக்கியமானதாக உள்ளது. ஆண்டுக்கு ஒரு லட்சம் கண் தேவைப்படுகிறது. ஆனால் அதில் 0.002 என்ற அளவில்தான் கண் தானம் கிடைக்கிறது. எனவே, நாடு முழுவதும் கண் தானம் குறித்த விழிப்புணர்வு தேவைப்படுகிறது," என்று கூறினார்.

அகர்வால்ஸ் கண் மருத்துவமனை மருத்துவ இயக்குனர் டாக்டர் ஜெயஸ்ரீ இது குறித்து கூறும் போது, "குறிப்பாக மூடநம்பிக்கை ஒழிக்கப்பட வேண்டும். கண் தானம் செய்தால் இறந்தவரின் உடல் அழகு போய்விடுமோ, அவர் சொர்க்கத்திற்கு போக மாட்டாரோ என்ற மூடநம்பிக்கை உள்ளது. அதெல்லாம் ஒழிக்கப்பட வேண்டும். ஒருவர் இறந்த நேரத்திலிருந்து ஆறு மணி நேரத்திற்குள் கண்கள் எடுக்கப்பட்டால் மட்டுமே மற்றவர்களுக்கு பொருத்த முடியும். இறந்தவரின் கருவிழிகள் மட்டுமே எடுக்கப்படும். எனவே, இறந்தவரின் உடலில் எவ்வித பாதிப்பும் தெரியாது. பார்வை இழந்த ஒருவருக்கு கண் கிடைத்தால் அவர் வாழ்க்கையே மாற்றம் அடையும். எனவே, இது குறித்த விழிப்புணர்வு மிகவும் தேவை. கண் தானம் செய்ய அனைவரும் முன்வர வேண்டும்" என்றும் அவர் தனது பேட்டியில் கூறினார்.

# நெல்லை ஏஐடியூசி அலுவலகத்தில் கணினி திறப்பு

நெல்லை ஏஐடியூசி மாவட்ட அலுவலகத்தில் உடலுழைப்பு மற்றும் கட்டிட தொழிலாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினர் பதிவு செய்வதற்கான கணினி பதிவு மையம் துவக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு ஏஐடியூசி மாநில தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன் தலைமை தாங்கினார். ஏஐடியுசி மாவட்ட உபதலைவர் ஆர். ரெங்கன் வரவேற்புரை ஆற்றினார்.

தொழிலாளர் நலத்துறை ஆணையாளர்நா. முருக பிரசன்னாகணினி பதிவை துவக்கி வைத்தார். தொழிலாளர் துறை நல வாரிய கண்காணிப்பாளர் நடராஜன், பிரேம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்டச் செயலாளர் செ. லெட்சுமணன், ஏஐடியூசி செயலாளர்கள் முத்துகிருஷ்ணன், சுரேஷ், சேதுராமலிங்கம், ஏஐடியூசி மாநிலக்குழு உறுப்பினர் முருகன் மற்றும் லெனின் முருகானந்தம், தென்காசி மாவட்ட ஏஐடியூசி செயலாளர் சுப்பையா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் ஆர். சடையப்பன் நன்றி கூறினார்.



◆ தோழர் டி.எம்.மூர்த்தி ராஜேஸ்வரி தம்பதியினர் தங்களது திருமண நாளில் ஜனசக்திக்கு நிதி அளித்தனர்.

## திருவயலூர் தியாகி முருகனின் 44 ஆவது நினைவு தினம்

போச்சம்பள்ளி வட்டம் திருவயலூரை சேர்ந்த முருகன் சிறுவயதில் இருந்தே அநியாயங்களை எதிர்த்தும், நில பிரபுகளை எதிர்த்தும் பல்வேறு போராட்டங்களை நடத்தினார். சமூக விரோதிகளால் கொல்லப்பட்டார். அவருடைய நினைவாக போச்சம்பள்ளி திருவயலூர் அவருடைய நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வு வட்ட செயலாளர் புல்லா செட்டி தலைமையில் நடைபெற்றது. மாநில குழு உறுப்பினர் எஸ். கண்ணு கலந்து கொண்டு அவருடைய தியாகங்களைப் பற்றி உரையாற்றினார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் ராமமூர்த்தி, சக்கரவர்த்தி,வெங்கடாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர் இறுதியாக தேவராஜ் நன்றி கூறினார்.

### தேவிபட்டணம் ஊராட்சி மன்றத்தில்
## முறைகேடுகளை கண்டித்து கண்டன தீர்மானம்

மாவட்ட நிர்வாக குழு கூட்டம் மாவட்ட செயலாளர் டி. இசக்கித்துரை தலைமையில் நடைபெற்றது! மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் கே சுப்பராயன், மாநில செயற்குழு உறுப்பினர் கே சந்தானம், மாநில ஏ ஐ டி யு சி தலைவர் எஸ் காசி விஸ்வநாதன் கலந்து கொண்டனர்! வாசுதேவநல்லூர் ஒன்றியம் தேவிப்பட்டினம் ஊராட்சியில் நிகழும் முறைகேடுகளை குறித்து புகார் அளித்த கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் மீது சாதிய வன்கொடுமை திணிப்பதே ஊராட்சி தலைவர் ராமராஜ் தொடர்ந்து செய்து வருகிறார். கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சிங்காரவேலு மீது சாதிய வன்கொடுமை தூண்டியதாக புகார் அளித்தது மட்டுமின்றி சமூக வலைதளங்களிலும் வீடியோ பதிவு பரப்பி உள்ளார்! ஊராட்சி தலைவருக்கு இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட குழு கண்டனம் தெரிவிப்பதுடன் இந்தப் பொய் புகார் சட்டரீதியாக சந்திப்பது என மாவட்ட நிர்வாக குழு கூட்டத்தில் ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது!

## மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு பாரதியார் சிலைக்கு மலரஞ்சலி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு மகாகவி பாரதியார் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

மகாகவி பாரதியார் 102வது நினைவு நாளில் 11.09.2023 சென்னை மெரினா கடற்கரையில் உள்ள பாரதியார் சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், இரா. நல்லகண்ணு மலர் மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினார் அவருடன் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி, தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே. சிவா, மாணவர் பெருமன்ற மாநிலத் துணைச் செயலாளர் மணிகண்டன் உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 131. சிறுமையும் பெருமையும்

**சிறுமையைக் கண்டால் சிலிர்க்கும் பெருமை**
**சிறுமைசேர்ந் தெண்ணித் தெளி.**

கீழான செயல்களைக் கண்டால் உலக மக்கள் சிலிர்த்து எழுவார்கள். பெருமை எது! சிறுமை எது! என ஆய்ந்து பெருமையை மேற்கொள்க.

**களரென்பக் காட்டு மரமென்ப இன்னும்**
**கடையென்ப காய்ந்து கடுத்து.**

பழைய அறநூல்கள், பாமரர்களை களர் என்றும், மரம் என்றும் கீழானவர் என்றும் கடுமையாகச் சினந்து கூறும்.

# நடப்பதும் நடக்கக் கூடாததும்!



இளசை கணேசன்

**சீமான் ஒரு அரசியல் கட்சியின் தலைவர். அவர் மீது பாலியல் புகார். இது குறித்து கருத்துக் கூறி வம்பில் மாட்டிக் கொள்ளக் கூடாது.**

விஜயலட்சுமி ஒரு திரைப்பட நடிகை. அவரை நம்பி கருத்து கூறி சிக்கலில் மாட்டிக்கொள்ளக் கூடாது. இந்த ரீதியில்தான் கொடுக்கப்பட்ட புகார் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதனால் மனதில் பட்ட கருத்துக்களை கூட வெளியே சொல்லாமல் விலகிப் போகும் சூழல் நிலவுகிறது.

ஒரு புகாரை அரசியல் தலைவர் – திரைப்பட நடிகை என்பதை மட்டுமே பிரதானமாகக் கொண்டு அணுக கூடாது.

- **கொடுக்கப்பட்ட புகாரின் தன்மை.**
- **புகாரில் உண்மை இருக்கிறதா? இல்லையா?**

என்பது குறித்து முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

ஒரு பெண் பாலியல் ரீதியில் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாக ஒரு ஆண் மீது புகார் கொடுத்திருக்கிறார்.

பாதிக்கப்பட்ட பெண் யார்?

நடிகையா? அல்லது வேறு எந்தத் துறையை சார்ந்தவர்?

என்பது முக்கியமல்ல.

புகார் கொடுத்திருப்பவர் பெண் என்று பார்க்கப்பட வேண்டும். கொடுக்கப்பட்ட புகாரில் உண்மை இருக்கிறதா? என்பது குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்?

என் மீது புகார் கொடுத்த பெண் எனக்கு முன்னால் எத்தனை பேரை ஏமாற்றி இருக்கிறார்? என்று கூறுவது புகாருக்கான சரியான பதில் அல்ல. கொடுக்கப்பட்ட புகாருக்கும் இந்தப் பதிலுக்கும் என்ன தொடர்பு? இது புகாரை திசைதிருப்பும் உத்தியாகவே கருதப்படும்.

கூறப்படும் புகார் உண்மையா? இல்லையா? என்பதுதான் நேரடியான கேள்வி. இந்தக் கேள்விக்கு நேரடியாக புகாரில் உண்மை இருக்கிறது அல்லது பொய்யாக கொடுக்கப்பட்டது என்றே பதில் சொல்ல வேண்டும்.

புகார் உண்மை என்பதை தகுந்த ஆதாரங்களோடு புகார் கொடுத்தவர் நிரூபிக்க வேண்டும்; பொய்யான புகார் என்பதை தகுந்த ஆதாரங்களோடு புகார் கொடுக்கப்பட்டவர் நிரூபிக்க வேண்டும்.

எது நடக்க கூடாதோ! அது நடக்கிறது.

- **பொதுவெளியில் வரவேண்டியதில்லை.**
- **வந்த பின்பு மேலும் வளர விடாமல் தடுக்கப்பட வேண்டும். மாறாக விரிந்து கொண்டேபோகிறது.**
- **புகார் திசை திருப்பப்படக் கூடாது.**
- **பெண்ணுக்கு எதிராக பெண்களை நிறுத்தி பதில் கூறி, புகாரை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.**
- **இரண்டு தரப்பிலும் சமர்ப்பிக்கப்படும் ஆதாரங்கள் உண்மையாக இருக்க வேண்டும். குறுக்கு வழியில் திரிக்கப்பட்டதாக இருக்கக் கூடாது.**





- **விவாதத்தில் கருத்து கூறுபவர்கள் மீது வாய்க்கு வந்தபடி ஆபாச வார்த்தைகளால் திட்டவும், மிரட்டப்படவும் கூடவே கூடாது.**
- **அரசியல் ரீதியாக அந்தர் பல்டி அடிக்க வேண்டிய தேவையுமில்லை.**

இது போன்ற அர்த்தமற்ற செயல்களால் ஆதரவுஎன்பதற்கு பதில் எதிர் விளைவுகளே அதிகரிக்கும்.

விமர்சனங்களை கருத்தாக எதிர்கொள்ள வேண்டும். அரசியலை அரசியலாக எதிர்கொள்ள வேண்டும். இது அரசியல் தலைவர்களுக்கு மட்டுமல்ல. இரண்டாம் கட்டம் முதல் நான்காம் கட்ட தலைவர்கள் வரை பொருந்தும்.

கேவலமான புகார் என்பதால் கடந்து செல்ல நினைக்கிறேன் என்ற பதில் கூறி தப்பித்து விட முடியாது! ஒரு பாலியல் புகார் ஆணுக்கு கேவலம் என்றால் பெண்ணுக்கு மட்டும் கேவலம் இல்லையா? இது உணரப்பட வேண்டும்.

2011 இல் கொடுக்கப்பட்ட புகார் 13 ஆண்டுகள் கழித்து இப்போது எழுப்பப்படலாமா? என்ற கேள்வி எடுபடாது!

மீ டூ (#MeToo) அல்லது நானும் பாதிக்கப்பட்டேன் இயக்கம் நினைவிருக்கும். உலக அளவில், பணியிடங்களில் பெண்கள் தங்களுக்கு எதிராக நடந்த பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் தாக்குதல்களை வெளியுலகிற்கு அம்பலப்படுத்திய இயக்கமாகும். இந்தியாவிலும் இந்த இயக்கத்தால் பல பிரபலங்களின் கழன்று விழுந்தன. அதனால் எப்பொழுது புகார் எழுப்பப்படுகிறது என்பது முக்கியமல்ல.

கொடுக்கப்பட்ட புகார் நீதிமன்றத்திற்கு வெளியே முறையாக சரியாக தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது நீதிமன்றத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டும் இல்லை என்றால், அது எப்போது வேண்டுமானாலும் மீண்டும் எடுக்கப்படலாம்.

முன்பு போல் அல்ல, தற்போது ஒவ்வொரு முதல் தகவல் அறிக்கை பதிவுக்கும் எண்கள் கொடுக்கப்படுகின்றன. எனவே விசாரணையை, விசாரணை மீதான நடவடிக்கைகளை தாமதப்படுத்தலாமே தவிர, தேவையில்லை என முடித்து விட முடியாது.

புகார் கூறியவரிடம் தற்போது மகளிர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் பெறப்பட்டு, வாக்குமூலங்களை மறுத்தல் மற்றும் பிறழ் சாட்சியங்கள் ஆகியவற்றை எதிர்கொள்ளும் வகையில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 164 ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு அரசியல் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் இவற்றை சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும். எல்லாம் தெரிந்த ஏகாம்பரத்திற்கு, இது கூடவா தெரியாது. எனக்கு முன்னால் ஆறு பேர் என்பது "நான் ஏழாவது நபர்" என்பதை ஒத்துக் கொள்வதாகிறது.

பல பெண்களை ஏமாற்றியுள்ளார் என்ற புகார் தன் மீதும் உள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும்.

அந்தப் பெண் ஆறு பேரை ஏமாற்றி இருக்கிறார் என்ற பதில் ஆணாதிக்கத் திமிரை வெளிப்படுத்துவதே. ஒருவேளை ஆறு பேர் என்ற சம்பவம் உண்மையானதாகவே இருந்தாலும் கூட, யாரால் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பதே முக்கியம். ஆறு பேரால் அந்தப் பெண் பாதிக்கப்பட்டு இருக்கிறார் என்று ஏன் கூறக்கூடாது? பெண் மீது மட்டும் குற்றத்தை சுமத்தி ஆண்களை ஏன் காப்பாற்ற வேண்டும்?

'கற்பு' என்ற நிலை பெண்களுக்கு மட்டும்தானா? ஆண்களுக்கு கிடையாதா? ஏன் இந்த ஒருதலைப்பட்சம்? 'தேவடியாள்' பட்டம் பெண்களுக்கு மட்டும் தானா? ஆண்களுக்கும் 'தேவடியான்' என்று பட்டம் கொடுக்க வேண்டியதுதானே!

"இலந்தை முள் மீது இலேசான சேலை பட்டாலும் அல்லது சேலை மீது அந்த முள் பாட்டாலும் பாதிப்பு சேலைக்கு தான்" என்ற சாதாரண உண்மை கூட புரியாதா?

இந்த சம்பவத்தை பொருத்தவரையில் புகாரை மறுப்பதற்குப் பதில் எதிர் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த எதிர் புகாரிலும் கூட அந்த ஆறு பேர் மீது பாதிக்கப்பட்ட பெண் புகார் கொடுத்துள்ளாரா? அல்லது அந்த ஆறு பேரும் இந்தப் பெண்ணால் ஏமாற்றப்பட்டோம் என்று புகார் கூறியுள்ளார்களா? ஆனால், இதில் எந்த ஒன்றும் நடக்கவில்லை. எனவே இது பற்றி புதிதாக எதிர் புகார் கிளப்புவது கொடுக்கப்பட்ட புகாரை திசை திருப்புதே ஆகும்.

பாதிக்கப்பட்டதாக கூறப்படும் பெண் தரப்பில் காட்டப்படும் ஆதாரங்கள் பொய்யானவை. செயற்கை நுண்ணறிவு மூலம் திரிக்கப்பட்டவை என்று நிரூபிக்கும் உரிமை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு உண்டு.

சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள் உண்மை என்று நிரூபிக்கும் பொறுப்பு புகார் கொடுத்தவருக்கு நிச்சயம் உண்டு. இருதரப்பும் உரிய ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கட்டும். நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பின் மூலம் உண்மை வெளிவரட்டும்.

தொடர்புக்கு: 8220468816

# 'ஒரு நாடு, ஒரே உரம்' இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு செயலாளரும், நாடாளுமன்றக் குழு தலைவருமான பினாய் விஸ்வம் எம்பி, இந்திய அரசின் பிரதமர் நரேந்திர மோடிக்குச் செப்டம்பர் 1ம் தேதி எழுதிய கடிதத்தில், அரசின் 'ஒரு நாடு, ஓர் உரம்' திட்டம் குறித்து விவசாயிகளின் கவலைகளை வெளிப்படுத்தினார்.

"வேறுபட்ட பல்வேறு உரங்கள் அனைத்தையும் ஒரே பெயரில் ஒன்றாக்குவதன் பின்னே உள்ள பகுத்தறிவு தெளிவற்றதாக உள்ளது. உரத் தொழில் பிரிவில் பொதுத் துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் பணியாற்றுகின்றன. இந்த அனைத்து உரங்களுக்கும் ஒரே பெயர் என்பது அவற்றின் அடையாளத்தையும், உர நிறுவனங்கள் கட்டியெழுப்பியுள்ள மதிப்பையும் குறைப்பதுடன், விவசாயிகள் மத்தியில் குழப்பத்தையும் ஏற்படுத்தும். விவசாயிகள் தங்கள் பயிர்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு, குறிப்பிட்ட தயாரிப்பு உரத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

உரப்பைகளில் "PM-BJP" என மிக எடுப்பாக அச்சிடும் முடிவு மேலும் கவலைகளை ஏற்படுத்துகிறது. திட்டத்தின் பெயரைச் சுருக்கமாக பிஜெபி என இலட்சினையுடன் சந்தைப்படுத்துவது ஆளும் பாரதிய ஜனதா கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரச்சாரமாகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்படும்; குறிப்பாக மக்களவை 2024 பொதுத் தேர்தல் எதிர்வரும் சூழ்நிலையில் இந்த நடவடிக்கை கவலைகளை ஏற்படுத்துவதாகும்.



"பிஎம் பிஜெபி" என்பதைத் தேர்ந்தெடுத்தது அரசியல் நோக்கத்துடன் எடுக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. அத்தகைய நடவடிக்கை அரசின் சார்பற்ற நடுநிலை தன்மை குறித்த பொது மக்களின் நம்பிக்கைச் சிதைப்பதாகும்; மேலும், வரி செலுத்தும் மக்களின் பணத்தை அரசியல் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தும் முயற்சியுமாகும்.

நமது தேசத்தின் விவசாயிகள் தங்களுக்கான உரங்களைத் தேர்ந்தெடுக்கும்போது, அவர்கள் தெளிவு, தேர்வு செய்யும் வாய்ப்பு மற்றும் வெளிப்படைத் தன்மை பெறுவதற்கு உரிமை உள்ளவர்கள். ஒரு பிராண்டு உரத்தைத் திணிப்பது, அதுவும் அப்பட்டமான அரசியல் நோக்கத்துடன் திணிப்பது, அவர்களின் தேர்வு செய்யும் வாய்ப்புகளைக் குறைப்பதுடன் வாங்கும் உரத்தின் தரம் மற்றும் திறனைக் கேள்விக்குள்ளாக்கும். நமது வேளாண் பெருமக்கள், நமது தேசத்தின் முதுகெலும்பு, எனவே மற்ற எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களின் நலன்களை உறுதிப்படுத்துவது நமது கூட்டுப் பொறுப்பாகும்.

இப்பின்னணியில், "ஒரு நாடு, ஓர் உரம்" என்ற கொள்கை முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும், உர உற்பத்தி நிறுவனங்கள் தங்களின் தனித்த அடையாளங்களையும், நுகர்வோர் மத்தியில் ஏற்படுத்திய நம்பிக்கையையும் தொடர்ந்து பராமரிக்க உர நிறுவனங்களை அனுமதிக்க வேண்டும் எனவும் நான் உங்களை வற்புறுத்துகிறேன்.

மேலும், அரசியல் சார்பு உள்நோக்கமில்லை என்பதை உறுதிப்படுத்த உர மூட்டைகளின் மேல் "பிஎம் பிஜெபி" என்று அச்சிட்டு சந்தைப்படுத்துவதை உடனடியாக நீக்குமாறும் நான் உங்களிடம் வற்புறுத்துகிறேன்."

இவ்வாறு பினாய் விஸ்வம் எம்பி கடிதத்தில் பிரதமரிடம் வற்புறுத்தியுள்ளார்.


இராமநாதபுரம்


திருப்பூர்
1வது மண்டலம்


தூத்துக்குடி


ஈரோடு வடக்கு
பவானி


தஞ்சாவூர்


பண்ருட்டி



ஜோலார்பேட்டை


கடலூர்


கும்பகோணம்


கள்ளக்குறிச்சி
திருக்கோவிலூர்


திருச்சி


மயிலாடுதுறை


அரியலூர்


அம்பாசமுத்திரம்


நெல்லை


திருவாரூர்
முத்துப்பேட்டை


நாமக்கல்


மணப்பாறை


தென்காசி
சிவகிரி


வள்ளியூர்


தூத்துக்குடி
ஆழ்வார் திருநகர்


திருவண்ணாமலை



தேனி


திருப்பத்தூர்


வேலூர்



விருத்தாச்சலம்



ஈரோடு வடக்கு
ஜம்பை



சத்தியமங்கலம்



ஈரோடு வடக்கு
பவானிசாகர்



கோபி



திருவள்ளூர்


செங்கல்பட்டு

**JANASAKTHI** Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 16.09.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57













4 ஆம் பக்க தொடர்ச்சி

எதிரில் உள்ள இந்தியன் வங்கி முன்பு நடைபெற்றது. குமரி மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமை தாங்கினார்.அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநில செயலாளர் க.பாரதி மறியல் போராட்டத்தை தொடங்கி வைத்தார். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட துணை செயலாளர்கள் எஸ். அனில்குமார் மற்றும் மாவட்டக்குழு உறுப்பினர் வி.அருணாசலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.தேசிய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசிய செயலாளர் டி.எஸ்.நடராஜன் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநிலத்தலைவர் எஸ்.கே.கங்கா இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஜி.சுரேஷ் மேசியதால், கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.ராஜீ உட்பட ஏராளமான தோழர்கள் மறியலில் கலந்து கைதாகினர்.

குமரி மாவட்டம் சார்பில் தொடர் மறியல் போராட்டம் இரண்டாவது நாளாக ஆரல்வாய்மொழி எம்.ஜி.ஆர் சிலை எதிரே தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஐ.ஒ.பி.வங்கியின் முன் மறியல் போராட்டம் நடைபெற்றது. ஆரல் பொருளாளர் வி.வாசு தலைமை தாங்கினார்.மாவட்ட துணை செயலாளர் எஸ்.அனில்குமார் மறியல் போராட்டத்தை துவக்கி வைத்தார். மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் குமரி மாவட்ட செயலாளர் செல்வராணி உட்பட பல்வேறு தோழர்கள் கலந்து கொண்டனர்.

## நாமக்கல்

நாமக்கல் மாவட்ட குழு சார்பில் பிஎஸ்என்எல் தலைமை அலுவலகம் முன்பு மறியல் போராட்டம் மாவட்ட செயலாளர் க.அன்புமணி மாணவர் பெருமன்றத்தின் மாநில செயலாளர் பா.தினேஷ் தலைமையில் நடைபெற்றது. மாதர் சங்க மாநிலத் துணைச் செயலாளர் எல்.லலிதா மாவட்ட குழு உறுப்பினர்கள், விவசாய சங்க மாவட்ட செயலாளர் என். செல்வராஜ் உட்பட 130 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

## தஞ்சை வடக்கு

கும்பகோணம் மாநகரில் தொடர் மறியல் போராட்டம் சிறப்பாக நடைபெற்றது தேசியக் குழு உறுப்பினர் வை. சிவபுண்ணியம் தலைமை விகித்தார். மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## விருதுநகர்

விருதுநகர் தேசபந்து மைதானத்திலுள்ள தபால் அலுவலகம் முன்பு மறியல் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி தலைமை வகித்தார். தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ தொடங்கி வைத்துப் பேசினார். மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன், இடைக்கமிட்டி செயலாள்கள் உள்ளிட்ட பெண்கள் 249 பேர்களும், ஆண்கள் 213 பேர்களும் மொத்தம் 462 பேர்கள் மறியல் செய்து கைதானர்கள்.

## திருச்சி

திருச்சி ஜங்ஷன் ரயில் நிலையத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர், புறநகர் மாவட்ட குழுவின் சார்பில் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் பி.பத்மாவதி தலைமையில் மறியல் போராட்டம் நடைபெறுகிறது.

கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ். சிவா, புறநகர் மாவட்ட செயலாளர் செ.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், ஏஐடியுசி பொதுச் செயலாளர் க. சுரேஷ், தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட செயலாளர் அயிலை சிவசூரியன், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் எஸ். செல்வகுமார், புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.பழனிசாமி, உள்ளிட்ட 250க்கும் மேற்பட்டோர் கைதாகினர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Muthamsan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.